# ஈழத் தமிழரும் சிங்களவர்களும்



JPL
C12465

ஷண்முகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

KOHA JPL

# ஈழத் தமிழரும் சிங்களவர்களும்



245673

ஷண்முகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

245673 CC

2
954.93

| | | |
|---|---|---|
| Book Title | : | Eelath Thamilarum Sinhalavarkalum |
| First Edition | : | October 2014 |
| Published By | : | Tech Press, Australia |
| Author | : | Shanmugan |
| Pages | : | 120 |

Copyright © 2014 Reserved by Author

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

இலங்கையில் தமிழரின் பூர்வீகத்தை சித்தரிக்கும் இந்நூல் மிகமிக முக்கியமானதும், அவசியமானதுமாகும். காலப்போக்கில், ஈழத் தமிழரின் உரிமைகளை நிலைநாட்டத் தத்தளிக்கும் இந்நிலையில், உலகிற்கு ஈழத் தமிழரின் சரித்திரத்தை தெளிவான எடுத்துக் கூறுவது அவசியமானதாகும்.

ஈழத்தில், ஆதாரங்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், இருக்கின்ற மறைந்துபோன ஆதாரங்களை ஒன்றுதிரட்டி இந்நூல் ஆசிரியர் இதை வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரியது.

ஈழம், இந்தியா மேலும் பல நாடுகளில் உள்ள ஆதாரங்களின்படி கி.மு.300-ம் ஆண்டிலிருந்து ஈழத்தமிழர் சரித்திரம் வேறு நூல்களில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இந்நூல் தென் இந்தியா, ஈழம் போன்ற இடங்களில் நடாத்தப்பட்ட அகழ்வாராய்ச்சி, கோயில் ஏடுகள் என்பனவற்றை சான்றாகக் கொண்டு பண்டைய ஈழத்தமிழரின் (ஏறக்குறைய 5000 வருட சரித்திரம்) வரலாற்றைக் கூறுவது மிகவும் சிறப்பான முயற்சி.

**சிவபாலன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கை பிரித்தானிய ஆட்சியில் இருந்து விடுபட்ட 1948-ம் ஆண்டிலிருந்து ஈழத் தமிழர் சார்ந்த சரித்திரச் சான்றுகளின் அழிப்பு நடவடிக்கைகள் முனைப்புப் பெற்றது மட்டுமன்றி அவர்கள் தொடர்பான வரலாற்று உண்மைகள் மறைக்கப்பட்டும் ஈழத் தமிழருக்குப் பாதகமான முறையில் திரிக்கப்பட்டும் வருகின்றன.

ஈழத் தமிழர் பற்றிய வரலாற்று உண்மைகளை அனைத்துலக மக்களும் அறியும் வகையில் மிகத் தெளிவாக எடுத்துரைத்தல் மிகுந்த அவசியமும் காலத்தின் காட்டாயமும் ஆகும். அத்துடன் இது மிகவிரைவாகவும் செயற்படுத்தப்படுதல் வேண்டும். இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியத் தமிழ் நாட்டிலிருந்து இலங்கையின் மத்திய மலை நாட்டின் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்குக் கொண்டு வந்து குடியமர்த்தப்பட்ட பல லட்சம் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுடன் ஈழத் தமிழர் வரலாற்றைக் குழப்பும் ஓர் அவல நிலை உலக நாடுகள் பலவற்றில், குறிப்பாக இந்தியத் தமிழ் நாட்டில், காணப்படுகிறது.

இதனைக் களைந்து உண்மையை உணர்த்தவும், நடை பெறும் ஈழத் தமிழர் சரித்திர அழிப்பை உலகிற்கு எடுத்துக் காட்டவும் முனைவதே இச்சிறு நூலின் நோக்கமாகும். ஈழத் தமிழர்களே இலங்கையின் ஆதி மண்ணின் மைந்தர்கள்.

இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் கௌதம புத்தர் இலங்கைக்கு வருகை தந்தபோது இலங்கை ஒரு பூராணமான தமிழ் நாடாகவே இருந்தது. சிங்களவர் எனும் ஓர் இனம் அப்போது இல்லாததால் (தோன்றாததால்) அவ்வினம் பற்றி எவருமே அப்போது கேள்விப்பட்டதில்லை.

**ஷண்முகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | வாழ்த்துரை | 1 |
| | முன்னுரை | 2 |
| 1. | ஈழத் தமிழர் வரலாறு | 5 |
| 2. | அநுராதபுரமும் தமிழ் மக்களும் | 43 |
| 3. | இலங்கையின் வடமேல் மாகாணத் தமிழர்கள் | 47 |
| 4. | இலங்கை முஸ்லிம்கள் | 51 |
| 5. | ஈழத் தமிழரும் கேரளமும் | 55 |
| 6. | இலங்கையும் சிங்கள மக்களும் | 61 |
| 7. | கிரந்த லிபியும் சிங்களமும் | 77 |
| 8. | ஈழத் தமிழரின் தற்போதைய நிலமை | 83 |
| 9. | ஈழத் தமிழரின் எதிர்காலம் | 105 |
| | References | 109 |
| | பின் இணைப்பு | 111 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 1

# ஈழத் தமிழர் வரலாறு

பல ஆயிரம் வருடங்கள் முன்னர் இலங்கையும் இந்தியாவும் இந்து சமுத்திரத்தின் பாக்கு நீரிணையாற் (Palk Strait) பிரிக்கப்படாத ஒரு தொடர் நிலப்பரப்பாக இருந்தன. (இலங்கையும் இந்தியாவும் ஒரே கண்ட அடுக்கில் (Continental Shelf) அமைந்துள்ளது). இத் தொடர் நிலப்பரப்பின் முழுமையான தென்னிந்தியப் பகுதி முதல் இலங்கை (முழுவதும்) வரை வாழ்ந்தவர்கள் தமிழர்களாகவே இருந்தனர்.

மேற்படி தொடர் நிலப்பரப்பின் இலங்கை மண்ணில் அன்று வாழ்ந்து வந்த மக்களும் இன்று வாழும் அவர்களது சந்ததியினரும் இந்தியாவின் இன்றைய கேரள மாநிலத்தில் பண்டு தொட்டு இன்றுவரை வாழ்ந்து வரும் மக்களுடன் பெருமளவு ஒத்த தன்மைகளைக் கொண்டுள்ளனர் (Sittampalam S.K., 2003). இலங்கையிலும் கேரளப் பகுதியிலும் வாழும் இம்மக்கள் சேரர் என்னும் பொதுப் பெயரால் குறிப்பிடப்படுகின்றனர் என்பதுடன், இலங்கையில் வாழ்கின்ற இவ்வின மக்கள் அன்றும் இன்றும் ஈழத்தமிழர்கள் என்றே அழைக்கப்படுகின்றனர். அவர்கள் வாழ்ந்த இடங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டைகால இலங்கை வரைபடத்தில் (படம் 1) தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.**




**படம் 1 பண்டைய கால இலங்கை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.மு.1400 தொடக்கம் கி.பி. 2-ம் நூற்றாண்டு வரை சங்க காலங்கள் எனவும் சங்க காலம் கி.மு. 1400-க்கு முன்னரே தொடங்கியது எனவும் பல அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. ஈழத்துப் பூதந்தேவனார், ஈழக்குடும்பிகன், முரஞ்சியூர் மூடிநாகராயர் போன்ற பல ஈழத்துத் தமிழ்ப் புலவர்கள் முதலாம் (முதல்), இரண்டாம் (இடை) தமிழ்ச் சங்கங்களைச் சிறப்பித்த நூற்றுக்கணக்கான சிறந்த கல்விமான்களிற் சிலராவர். மூன்றாம் (கடை) தமிழ்ச் சங்கமும் பல ஈழத் தமிழ்ப் புலவர்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது.

முதற் தமிழ்ச் சங்கம் - தென் மதுரை
இடைத் தமிழ்ச் சங்கம் - கபாட புரம்
கடைத் தமிழ்ச் சங்கம் - வட மதுரை

புலஸ்தியர் (புலஸ்திய மஹறிஷி) கௌதம புத்தர் தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் இலங்கையில் வாழ்ந்தார். அவர் பதினெட்டு (18) சித்தர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். அவர் வாழ்ந்த புலஸ்தியகம (Pulasthia gama) எனும் கிராமம் (சிங்களத்தில் "gama" என்றால் தமிழில் "கிராமம்"), பொலன்நறுவ (புலஸ்திய நகர -> புலஸ்திய நுவர -> பொலன்நறுவ) நகரம் (சிங்களத்தில் நுவர = தமிழில் நகரம்) ஆகியவை இன்றும் அதே பெயர்களுடன் இலங்கையில் உள்ளன. புலஸ்தியரால் ஸ்தாபிக்கப்பட்ட அல்லது வணங்கப்பட்ட இரண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் கோவில்கள் (பொலன்நறுவையில்) பிற்காலத்தில் இலங்கை ராஜ ராஜசோழன் ஆட்சியின் கீழ் இருந்த போது ராஜ ராஜ ஈஸ்வரம், வானவன் மாதேவி ஈஸ்வரம் என்ற பெயர்களுடன் அவனால் சிறப்பாகப் புனர்நிர்மாணம் செய்யப்பட்டன. தற்போது மிகச் சிதைவடைந்த நிலையிலுள்ள இக்கோவில்கள் வரலாற்றுச் சின்னங்களாக உள்ளன. இக்கோவில்களில் 1907-1908-இல் அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டது (Arunachalam, P.(2004); Arumugam,S. (1981)). புலஸ்தியருடைய திருநாமம் இலங்கையிலுள்ள இந்துக் கோவில்களில் நடைபெறும் கொடியேற்ற (துவஜாரோஹண) வைபவங்களில் வாசிக்கப்படும் பத்ததியில் விசேடமாகக் குறிப்பிடப்படுவது எத்தனையோ நூற்றாண்டுகளாகத் தொடர்ந்தும் நடைபெறுகின்றது.

பொலன்நறுவையில் (மேலே குறிப்பிட்ட புலஸ்திய நகரத்தில்) துறவிகளுக்கு உரிய ஜடாமுடி, தாடி, பூணூல், பஞ்சகச்சம், இரு கைகளிலும் தாங்கியுள்ள ஏட்டுச்சுவடி ஆகியவற்றுடன் கூடிய ஓர் உயர்ந்த மிகப் புராதனமான கற்சிலை நின்ற நிலையில் காணப்படுகிறது. புலஸ்திய மகரிஷியின் சிலையாகவே இதனை இன்றும் காண்கின்றனர் ஈழத் தமிழ் மக்கள். இச்சிலையைப் பற்றிய தகவல்கள் படங்கள் 2,3-இல் காட்டப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசு, சில சிங்கள சரித்திர ஆசிரியர்களுடன் இணைந்து, ராஜ கம்பீரம் எதுவுமற்ற மேற்படி சிலையை, பொலன்நறுவையில் விவசாய நீர்ப்பாசனத்துக்கென அமைக்கப்பட்ட பராக்கிரம சமுத்திர நீர்த்தேக்கம் அமையக் காரணமாகக் கருதப்படும் பராக்கிரமபாகுவின் சிலை எனச் சிங்கள மக்களிடையே பிரசாரம் செய்து ஓரளவு வெற்றியும் கண்டுள்ளது. ஆனால் இச்சிலையின் தலைப்பக்கத்திற்குப் பின்னால் தேய்ந்து அழிந்து கொண்டிருக்கும் ஒரு கற்சுவட்டில் "புல.... த.... சா" என்று எழுதப்பட்டுள்ளது (Article by Anuradha Seneviratna). பொய்ப் பிரசாரம் இன்றும் தொடர்கின்றது.

காஸ்யப மஹறிஷி (முனிவர்) புலஸ்தியரின் தந்தையார் ஆவார். இராமாயணத்தின் முக்கிய கதாபாத்திரங்களான இலங்கை வேந்தன் இராவணன், விபீஷணன், கும்பகர்ணன், அவர்களது சகோதரி சூர்ப்பனகை ஆகியோர் புலஸ்தியரின் மகனான விஸ்ரவசின் புதல்வர்களும் புதல்வியுமாவர்.

இராவணன் ஓர் சிறந்த சிவபக்தனாவான். பிராமணனாகிய இவன் காசிப கோத்திரத்தைச் சேர்ந்தவன். சாம வேதத்தில் வல்லுனன். இந்து சமயம், குறிப்பாக சைவ சமயம், இவனது காலத்தில் மட்டுமன்றி இவனுக்கு முந்திய பல தலைமுறையினர் காலத்திலும் இலங்கை முழுவதும் செல்வாக்கு மிக்க ஒரே மதமாகத் திகழ்ந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 2 பொலனறுவையில் உள்ள புலஸ்திய மகரிஷியின் சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**படம் 3(a) ஜடாமுடி, தாடி, பூனூல், ஏட்டுச்சுவடி**



**படம் 3(b) பஞ்சகச்சம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணேஸ்வரம் (திருகோணமலை), நகுலேஸ்வரம் (கீரிமலை), திருக்கேதீஸ்வரம் (மன்னார்), முன்னேஸ்வரம் (சிலாபம்), தொண்டீஸ்வரம் (தேவேந்திரமுனை - தற்போது அகழ்வாராய்ச்சி மூலம் புராதன அழிபாடுகளாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது) ஆகிய ஐந்து சிவஸ்தலங்களும் இலங்கைக் கடற்கரைகளில் இலங்கையைச் சுற்றி உள்ள பஞ்ச ஈஸ்வரங்கள் ஆகும் (Arumugam S.,1999). இவை இராவணன் காலத்துக்கு முன்பிருந்தே இலங்கையைக் காக்கும் ஸ்தலங்களாக கௌரவிக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்தன. இதனால் இலங்கை "சிவக்ஷேத்திரம்" என்ற பெயரையும் பெற்றிருந்தது. திருக்கோணேஸ்வரம் இராவணனும் அவனது மூதாதையரும் வழிபட்டு வந்த ஸ்தலமாகும் (திருக்கோணாசலபுராணம்),

இராமபிரான் இராவணனைக் கொன்ற பின், பிரமஹத்தி தோஷம் நீங்குவதற்காக, இலங்கையை விட்டு நீங்கு முன் முன்னேஸ்வரம் சென்று முன்னைநாதரை வழிபட்டதாக முன்னேஸ்வர ஸ்தலபுராணம் கூறுகிறது. இராவணன் மனைவி மண்டோதரி இந்தியத் தமிழ் நாட்டின் உத்தரகோசமங்கை (இராமநாதபுரம் மாவட்டம்) சிவபெருமானை வழிபட்டு வந்தவள் எனத் திருஉத்தரகோசமங்கை ஸ்தலபுராணம் கூறுகிறபடியால், மண்டோதரி உத்தரகோசமங்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

அல்லது அதற்கு அண்மிய பிரதேசமொன்றைச் சேர்ந்தவளாக இருக்கலாம்.

இராவணனுடைய ஆட்சி, இற்றைக்கு 4500 ஆண்டுகளுக்கு முந்தியதெனக் கருததப்படுகிறது (கி.மு. 2554 - கி.மு. 2517) இராமாயண காலம் வேத காலத்துக்கு மிகப் பிந்தியதாகும். இராமாயணத்துடன் தொடர்புடைய, இராமாயணத்தின் நிகழ்வுகளை உறுதி செய்யும் பெயர்களையுடைய எத்தனையோ இடங்களும் கிராமங்களும் இலங்கையில் இன்றுவரை உள்ளன.

245673

124650

இராமாயண நிகழ்வு உதாரணங்கள் கீழே கூறப்பட்டுள்ளன.

1. திருக்கோணேஸ்வரம் (இராவணனும் அவனது முன்னோரும் வழிபட்ட சிவஸ்தலம் இன்றும் உள்ளது).
2. புலஸ்தியகம (புலஸ்தியர் கிராமம், இராவணனின் தந்தை வழிப்பேரன் புலஸ்திய முனிவர் வசித்த கிராமம்).
3. பொலன்நறுவ (புலஸ்தியர் வசித்த நகரம். இங்கு புலஸ்திய முனிவர் வழிபட்ட/ ஸ்தாபித்த இரண்டு சிவாலயங்கள் அழிந்த நிலையில் உள்ளன. புலஸ்தியர் சிலை எனக் கருதப்படும் ஓர் சிலையும் உள்ளது).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. முன்னேஸ்வரம் (பிரமஹத்தி தோஷம் நீங்க இராமர் வழிபட்ட ஸ்தலம் இன்றும் உள்ளது).
5. சீகிரிய மலைக்கோட்டை (உலகின் மிகப் பழைய மலைக்கோட்டை - இராவணன் வாழ்ந்த சித்திரகூட அரண்மனை. 50 நூற்றாண்டுகளுக்கு முன் அலகமந்தா அரண்மனை என்ற பெயருடன் கட்டப்பட்டது. (Article in "The Ceylon Daily News" of 06-03-2003). இந்த அரண்மனை கீழே காட்டப்பட்டுள்ளது (படம் 4)).
6. இராவணன் வெட்டு.
7. சீதா எலிய (எலிய - வெளி).

   சீதா கங்கை - (இதன் கரையில் சீதைக்கான கோவில் உள்ளது. சீதை சிறை வைக்கப்பட்ட இடம் - Haggala Gardens, Nuwara Eliya).
8. மன்னார் (இராமர் சேது அணை தொடங்கும் இடம்) விஸ்வகர்மாவின் மகன் நளன் (வாரைவீரன்) இப்பாலத்தை 7 நாட்களில் கட்டியதாக வால்மீகி இராமாயணம் கூறுகிறது).
9. விபீஷணன் கோவில் - தேவேந்திரமுனை.
10. கன்னியா வென்னீரூற்றுகள் (இராவணன் தனது தாயாருக்கு இறுதிக் கிரியைகள் செய்த இடம் -(திருக்கோணாசல புராணம்)).
11. இராவணன் மலை (Ravana Ella) (இராவணனின் நிர்வாகத் தலைநகர்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. **இராவணன் கோட்டை (சின்ன இராவணன் கோட்டை, பெரிய இராவணன் கோட்டை- படம் 1).**



**படம் 4 (a) சீகிரிய மலைக்கோட்டை (தரைத்தோற்றம்)**



**படம் 4 (b) சீகிரிய மலைக்கோட்டை (வான்தோற்றம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. கும்பகர்ணன் மலை (கொக்கிளாய்-முல்லைத்தீவுக்கு சமீபம்).
14. சீதாவாக்க
15. Rodney Jonklass எனும் ஆழ்கடல் படப் பிடிப்பாளர் திருகோணமலைக் கடலுக்கடியில் எடுத்த கட்டிடங்களின் சிதைவுகளின் படங்கள் இராமாயணத்துடன் தொடர்புடையனவாகக் கருதப்படுகின்றன.
16. இராவணனின் ஆக்கங்கள் (இன்றும் சமஸ்கிருதத்தில் உள்ளன).
    a. சிவதாண்டவ ஸ்தோத்ரம்
    b. நாடி பரீக்ஷா
    c. அர்க்கப் ப்ரகாஷ்டம்
    d. உத்தீஸ சிக்கித்ஸா
    e. ஒத்திய சிகித்ஸா
    f. குமார தந்திரம்
    g. வாதின பிரகாரணம்.

    இவற்றில், b. இலிருந்து g. வரையிலான நூல்களின் புராதன சிங்கள மொழிபெயர்ப்பு இன்றும் சிங்களத்தில் உள்ளன. இவற்றில் பல வைத்திய நூல்களாகும்.
17. வில்லூன்றி (திருகோணமலை - இக்கிராமத்தில் இராமபிரான் அம்பெய்து நீர்ச்சுனையொன்றை தனது படையினருக்காகத் தோற்றுவித்ததாகக் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பெயருடைய இடம் ஒன்று யாழ்ப்பாணத்திலும் உண்டு).

18. இராம - இராவண யுத்தத்தின் பின், விபீஷணன் நிர்வாகத் தலைநகரை இராவணன் மலையில் (Ravana Ella) இருந்து கல்யாணிக்கு (Kelaniya near Colombo) மாற்றியதுடன் கொழும்புக்குச் சமீபமான களுத்துறைவுடுக்கைத் தனது வாழிடமாகக் கொண்டான் எனவும் கூறப்படுகிறது.

இந்தியாவின் தமிழ் நாட்டில் உள்ள ஆதாரங்கள் பின்வருமாறு :

1. புலஸ்தியரின் அடக்கஸ்தலம் பாபநாசத்தில் உள்ளது. (திருநெல்வேலி மாவட்டம்).

2. திருப்புத்தூர்: கொள்ளைக்காரராயிருந்த வால்மீகி (வால்மீகம் - புற்று) அங்குள்ள கொன்றை வனத்திலுள்ள கொன்றை மரத்தின் கீழ் (ஸ்தல விருக்ஷம்) தவம் செய்து மஹரிஷியாக மாறிய இடம் - இராம கதை பாடிய இராமபிரானின் மகன்களான லவன், குசன் ஆகியோர் பிறந்த இடம். சீதாதேவி நீராடிய சீதேவி - சீதளி திருக்குளமும் இங்கு உண்டு. இது கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தலம். வால்மீகியின் வாழ்க்கையோடு தொடர்புள்ள சிவஸ்தலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோவில் மூலவர் திருத்தளிநாதர் ("தளி" என்றால் - கோவில்), சுயம்பு லிங்கம்.

3. திருப்பைஞ்ஜிலி - திருச்சியில் மண்ணச்ச நல்லூர் சமயபுரம் இடையில் உள்ளது. இங்கு இராவணன் திருவாயில் உள்ளது. இது இராவணன் வழிபட்ட சிவஸ்தலம்.

வட இந்தியாவில் உள்ள ஆதாரங்கள் பின்வருமாறு :

1. இந்தியாவின் 12 ஜோதிர்லிங்க திருத்தலங்களில் ஒன்றான 10,000 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த சோம்நாத் சிவாலயம் குஜராத் (Gujarat) மாநிலத்தில் வேராவல் என்ற இடத்தில் உள்ளது. இராவணன் இங்கு வந்து சோமநாதரை வழிபட்டதாக இக்கோவிலின் ஸ்தலபுராணம் கூறுகிறது. (சோம்நாத் சிவாலய ஸ்தலபுராணம்).

2. குஜராத்தில் உள்ள பட்டேல் (Patel) இனத்தவர், லேவா பட்டேல், காடவா பட்டேல் எனும் இரண்டு பிரிவினராக உள்ளனர். இராமபிரானின் மகன்களான லவன், குசன் ஆகியோரில் லவனின் வம்ஸத்தவர்கள் என லேவா பட்டேல் பிரிவினரும், குசனின் வம்ஸத்தவர் என காடவா பட்டேல் பிரிவினரும் உறுதிபடத் தெரிவிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹாவம்சம் இலங்கைப் பௌத்த சமய வரலாற்றின் ஓர் தொகுப்பாகக் கூறப்படுகிறது. மஹாவம்சத்தின்படி கௌதம புத்தர் இலங்கைக்கு மூன்று தடவைகள் வந்தார் எனவும் அவற்றில் ஒரு தடவை வந்தபோது இலங்கையில் இரண்டு நாகத்தமிழ் அரசர்களிடையே நிகழ்ந்த பிணக்கினை சுமுகமாகத் தீர்க்க உதவினார் எனவும் தெரிகிறது.

சூளோததரன், மஹோதரன் எனும் இவ்விரு அரசர்களும் சகோதரர்கள் எனவும் அவர்களில் ஒருவர் கல்யாணியில் (கொழும்புக்குச் சமீபமாக உள்ள தற்போதைய களனியா) இருந்தார் எனவும் மற்றையவர் நாகதீபத்திலிருந்து அரசாட்சி செய்தார் எனவும் மஹாவம்சத்தின் மூலம் அறிகிறோம். (இவர்கள் நாக வழிபாடு செய்யும் ஓர் இனத்தவராக அல்லது நாகக்கொடி உடையோராக இருக்கலாம்).

கௌதம புத்தருடைய இலங்கை விஜயங்கள் இலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்களை மட்டுமன்றி இந்தியாவின் தமிழ் நாடு, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள பெருந்தொகையானோரையும் பௌத்த மதத்தைத் தழுவ வகை செய்தது. தமிழ் நாடு, ஆந்திரப்பிரதேசம் (நாகார்ஜுனசாகர்), இலங்கை ஆகிய பிரதேசங்களிற் காணப்படும் பெருமளவு பௌத்த அழிபாடுகள் இதனைச் சந்தேகத்துக்கு இடமின்றி நிருபிக்கின்றன. புத்தர் காலத்துக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மிய பின் நூற்றாண்டுகளில் தமிழில் உருவான ஐம்பெரும் காப்பியங்களில் (மணிமேகலை, சிலப்பதிகாரம், குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி) மணிமேகலை போன்ற பௌத்த காப்பியங்கள் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் வாழ்ந்த தமிழர்கள் பௌத்த தர்மத்தை அக்காலங்களில் பின்பற்றினார்கள் என்பதை உறுதி செய்கின்றன (Schalk, P. et al, 2002; Veluppillai A, 1981, 1990; Ragupathy, P.,1987; Pushparatnam, P.,2002). மேற்படி ஐம்பெரும் காப்பியங்களிலோ அவற்றின் சமகால அல்லது அவற்றிற்கு முற்பட்ட தமிழ் இலக்கியங்கள் எவற்றிலோ சிங்கள இனம் பற்றிய குறிப்புகள் எவையும் காணப்படவில்லை. உண்மையில் இக் காலத்தில் அல்லது அதற்கு முன் உலகில் உள்ள மொழிகளில் தோன்றிய காப்பியங்கள், இலக்கியங்கள் எவற்றிலும் சிங்கள இனம் பற்றிய குறிப்புகள் இல்லை. எனவே சிங்கள இனம் புத்தருக்கு பிந்திய மேற்படி ஐம்பெரும் காப்பிய காலங்களிலும் உருவாகியிருக்கவில்லை என்பது தெளிவாகிறது.

ஆதிசங்கராச்சாரியஸ்வாமிகள், சைவ நாயன்மார்கள், வைஷ்ணவ ஆழ்வார்கள் போன்றோரது பெரு முயற்சியால் இலங்கையிலும், தமிழ் நாட்டிலும் பௌத்தர்களாக மதம் மாறியவர்கள் மீண்டும் இந்துமத வாழ்க்கைக்குப் பெருமளவில் திரும்பினர். ஆந்திர மாநிலத்திலும் அவ்வாறே நடைபெற்றது. இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக இந்தியாவிலும், இலங்கையிலும் பல பௌத்த விஹாரைகள், பௌத்த பயிற்சிப் பள்ளிகள் ஆகியன கைவிடப்பட்ட நிலையில் சிதைவடைந்து அழிந்து புராதனச் சின்னங்களாயின. எனவே இலங்கையில் சிதைவடைந்து அழிந்த புராதன பௌத்த வழிபாட்டுத் தலங்கள் பலவற்றை, குறிப்பாக இலங்கையின் தமிழ் மாகாணங்களில் அழிந்த நிலையில் காணப்படும் பௌத்த விஹாரைகள், பௌத்த தொல்பொருட்கள் ஆகியவற்றைச் சிங்கள மக்களின் சரித்திரத்துடன் தொடர்புபடுத்துவது மிகத் தவறானது. அத்துடன் விஷமத்தனமானது (Schalk, P.2002, 2013).

ஈமத் தாழிகளிலும், நடுகற் சமாதிகளிலும் இறந்தோரை அடக்கம் செய்யும் பண்பாடு திராவிட மக்களிடையே (தமிழ் மக்களின் மூதாதையரிடையே) மிகப் புராதன கால வழக்கமாக இருந்தது. இந்தியாவில் ஆதிச்ச நல்லூர் மற்றும் திராவிட மக்கள் வாழும் பல இடங்களில் நடந்த அகழ்வு ஆய்வுகள் ஈமத் தாழிகளையும், நடுகற் சமாதிகளையும் வெளிக்கொணர்ந்துள்ளன (Tamil Nadu Archaeological Department, 2005). ஆதிச்ச நல்லூர் அகழ்வாராய்ச்சி தொல்பொருட்கள், கி.மு. 1700 ஆண்டுகள் தொன்மை வாய்ந்தவை. இதேபோல இலங்கையிலும் பூநகரி, மண்கும்பான், பொன்பரப்பி, மாந்தை (மன்னார்), மாமடு, கந்தரோடை, கதிரவெளி, அனுராதபுரம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹபரணை, கோகெபே, குருகல்ஹின்னை, கம்பளை, கொண்டதெனிய, உகந்தை, திஸ்ஸமஹாராம (கதிர்காமம் சமீபம்), வளவை நதிப்பள்ளத்தாக்கு ஆகிய இடங்களில் ஈமத்தாழிகள் (Burial Urns of the Dead) அகழ்வு ஆய்வுகளில் பெறப்பட்டுள்ளன. இவையாவும் இலங்கை முழுவதும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் மயமாக இருந்ததை உறுதி செய்கின்றன (Pushparatnam P, 1993, 2000, 2002).

## *இந்தியாவின் மதங்களும் இலங்கையும்*

சனாதன தர்மமே இந்தியாவின் புராதன மதமாகும். இது மேற்குலகினரால் பிற்காலத்தில் இந்துமதம் எனப் பெயரிடப்பட்டது. சைவம், வைஷ்ணவம், சௌரம், சாக்தம், காணாபத்யம், கௌமாரம் எனும் ஆறு பிரிவுகளை இந்துமதம் கொண்டுள்ளது. இந்து மதத்தின் தத்துவங்கள், கொள்கைகள், நடைமுறைகள் ஆகியவற்றுடன் வேறுபட்ட நிலைப்பாடு காரணமாக பௌத்தம், சமணம், சீக்கியம் போன்ற மதங்கள் இந்திய மண்ணில் தோன்றின. இந்திய மதங்கள் பெரும்பாலும், அவை தோன்றிய தாவரங்கள் நிறைந்த சூழல் காரணமாகக், கொல்லாமை, புலால் மறுத்தல் ஆகியவற்றை வலியுறுத்துவனவாயின. பாலஸ்தீனத்தைச் சூழவுள்ள பாரிய பாலைவனப் பிரதேசம் காரணமாக அங்கு தோன்றிய மதங்களான கிறீஸ்தவம், இஸ்லாம், யூதம் ஆகியவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லாமையையும் புலால் மறுத்தலையும் வலியுறுத்துவதில்லை. மாறாகத் தேவைக்கு அதிகமாக மிருகங்கள் கொல்லப்படுவதை அவை ஆதரிப்பதில்லை. இந்தியாவிலே தோன்றிய மதங்கள் தம்மிடையே மத மாற்றங்கள் செய்வதற்கு "வாதில் வெல்லுதல்" என்ற முறையையே பெரும்பாலும் செயற்படுத்தின. மிக அரிதாகவே வன்முறைகள், யுத்தம், சலுகைகள் மற்றும் இலவசங்களை வாரி வழங்குதல் போன்ற வழிகளை இந்தியாவிற் தோன்றிய மதங்கள் தம்மிடை மதமாற்றம் செய்வதற்கு பயன்படுத்தியது. இதன் காரணமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களில் சிலர் சனாதனிகளாகவும், சிலர் பௌத்தர்களாகவும், சிலர் சமணர்களாகவும் இருந்த சந்தர்ப்பங்கள் பலவுண்டு. உதாரணமாக திருநாவுக்கரசு நாயனார், மருள் நீக்கியார் என்ற பெயருடன் சமணசமயத்தைச் சார்ந்திருந்தபோது அவருடைய அக்கா திலகவதியார் சைவசமயியாக இருந்தார். அதேபோல மதுரையை ஆண்ட கூன்பாண்டியன் சமண மதத்தவனாக இருந்த போது அவனது மனைவி மங்கயர்க்கரசி, மந்திரி குலச்சிறையார் ஆகியோர் சைவசமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர். இவ்வகையான இணக்கப்பாடுகள் இந்திய மதங்களிடையே பல பொதுத் தன்மைகளை ஏற்படுத்தின. உதாரணமாக இந்துமதக்கடவுளர்கள் சமண, பௌத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவேளைகளில் சீக்கிய மதத்தவர்களாலும் வணங்கப்பட்டனர் என்பதுடன் இந்துக் கடவுளரின் திருவுருவங்கள் மற்றைய இந்திய மத வணக்கத் தலங்களிலும் இடம்பெற்றன. அத்துடன் இந்திய மதங்களிடையே வழிபாட்டு முறைகளிலும் பல பொதுத் தன்மைகள் காணப்பட்டன. புத்தர் கிருஷ்ணபிரானின் ஒன்பதாவது அவதாரமாக இந்து மதத்துள் ஏற்றுக் கொள்ளப்பட்டார். அத்துடன் மற்றைய இந்திய மதங்கள் இந்து மதத்தின் சித்தாந்த வேறுபாடுகள் கொண்ட பிரிவுகள் எனவும் இந்துக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

கௌதம புத்தர் இலங்கைக்கு விஜயங்களை மேற் கொண்ட போது இலங்கை ஓர் பூரணமான இந்துத் தமிழ் நாடாகவே இருந்தது. புத்தரின் போதனைகளாற் கவரப்பட்ட தமிழ்க் குடும்பங்களின் தலைவர்கள்/முக்கியஸ்தர்கள் பௌத்த மதத்தைத் தழுவிய போது அக்குடும்பங்களில் இருந்த பெண்கள், குழந்தைகள் உட்பட மற்றையோரும் அவர்களைப் பின்பற்றிப் பௌத்தர்களாயினர். எனினும் இந்துமத சம்பிரதாயங்களைத் தொடர்ந்தும் அவர்கள் பேணி வந்ததால் இந்துமத சம்பிரதாயங்களும் கடவுளரும் இலங்கையின் பௌத்த மதத்தில் நிரந்தரமான இடத்தைப் பிடித்துள்ளது கண்கூடு. உதாரணமாக சமந்தகூட பர்வத (சமனல கந்த) மலைவாசராகிய சமன் தெவியோ ("தெவியோ" - சிங்களம்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

245673

"தெய்வம்"- தமிழ்) என்றழைக்கப்படும் திருமால் (விஷ்ணு) இலங்கையின் காவல்த் தெய்வமாகப் போற்றப்படுகிறார். கதிர்காமக்கந்தன் (கதரகம தெவியோ) சிங்களவர்களைக் காக்கும் தெய்வமாக நோக்கப்படுகிறார். அநேகமாக எல்லா பௌத்த விஹாரைகளிலும் கதிர்காம முருகன் மற்றும் வேறு இந்துக் கடவுளரின் திருவுருவங்களைக் காண முடியும். புத்தரின் இலங்கை வருகையின் பல நூற்றாண்டுகளின் பின் பௌத்த மதத்தின் செல்வாக்கால் பாளியும் தமிழும் இணைந்து சிங்கள மொழியையும் அதன் பேறான சிங்கள இனத்தையும் உருவாக்கின. சிங்கள அரச குடும்பங்கள், தென் இந்தியாவிலிருந்த இந்துத் தமிழ் அரச குடும்பங்களுடன் திருமண உறவுகளை ஏற்படுத்தியதாலும் இலங்கையிலும் இந்தியாவிலும் (தமிழ் நாடு) உள்ள இந்துத் தமிழர்களுடன் சிங்களவர்கள் அவ்வப்போது திருமண பந்தங்களை வைத்துக் கொண்டதாலும் பௌத்த - இந்து மதங்களுக்கு இடையிலான நெருக்கம் மிக அதிகரித்தது. இலங்கையில் ஆட்சி செய்த எல்லாத் தமிழ் அரசர்களும் இந்த இந்து - பௌத்த இணக்கப்பாட்டினைப் பேணிக் காப்பதில் மிகுந்த கவனம் செலுத்தினர்.

சிங்கள அரசர்களிலும் பலர் இவ்வாறே நடந்து கொண்டனர். எனினும் வேறு சில பௌத்த சிங்கள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர்கள் இந்து மதத்துக்கு எதிராகவும் செயற்பட்டுள்ளனர். பாண்டுகாபய எனும் சிங்கள மன்னன் அனுராதபுரத்திலிருந்த பழைய சிவாலயத்தை இடித்த பின் அவ்விடத்தில் ஈஸ்வர முனிய (இசுறு முனிய) எனும் பௌத்த தாபகத்தைக் கட்டினான். இதே போல திருக்கோணேஸ்வரம் மஹாசேனன் என்ற பௌத்த சிங்கள மன்னனாலும் முன்னேஸ்வரம் பராக்கிரமபாகு என்ற பௌத்த சிங்கள மன்னனாலும் இடித்தழிக்கப்பட்டன.

குளக்கோட்டன் எனும் தமிழ் மன்னர் இவ்விரு கோவில்களையும் மீண்டும் கட்டியெழுப்பினார். அத்துடன் திருக்கோணேஸ்வரம் கோவில் நிர்வாகத்துக்கெனப் பெருமளவு விவசாய நிலங்களையும் அளித்தார். இவ்விவசாய நிலங்களின் பாசனத்திற்கெனப் பாரிய கந்தளாய்க் குளத்தையும் அமைத்துக் கொடுத்தார். இதற்கான சிவாசாசனம் (கல்வெட்டு) இன்றும் அக்குளக்கட்டில் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *ஈழத் தமிழரிடையே காணப்பட்ட பிரிவுகளும் இடங்களின் பெயர்களும்*

இராமாயண காவியத்தின்படி இராவணனும் அவனது மூதாதையர்களும் பிராமணர்களாவர். எனவே 4500 ஆண்டுகளுக்கு முன்னரே பிராமண வகுப்பினர் இலங்கையில் வாழ்ந்துள்ளனர். இலங்கைக்கும் தமிழ் நாட்டிற்கும் இடையேயான தொடர்புகள் ஆதிகாலம் முதலாக என்றும் இருந்து வந்துள்ளன. பிராமணர்கள் இலங்கையில் தமிழ் அரசர்களின் அரச சபைகளில் மட்டுமன்றி சிங்கள அரசர்களுக்கும் ஆஸ்தான குருக்களாகவும் ஆலோசகர்களாகவும் பணியாற்றினர்.

பிராமண ஆலங்குளம், பிராமணன் தோட்டம், அந்தணன் திடல் போன்ற ஈழத் தமிழ்ப் பிரதேசங்களில் காணப்படும் கிராமப் பெயர்களும் Brahmanaya gama (gama - **கிராமம்**), Bamunu gama (Bamunu - **பிராமண**), Bamnunu kotuwa (kotuwa-**கோட்டை**), Bamunu wewa (wewa - **வாவி/குளம்**) போன்ற சிங்களப் பிரதேசங்களில் காணப்படும் கிராமப் பெயர்களும் இலங்கையில் புராதன பிராமணக் குடியிருப்புகளை வலியுறுத்துவதாக அமைந்துள்ளன. ஈழத்தில் மாவிட்டபுரம், நீர்வேலி, விளைவேலி, நவிண்டில், காரைநகர், திருகோணமலை மற்றும் இது போன்ற பல கிராமங்களில் புராதன பிராமணக் குடியிருப்புகள் இன்றும் காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த அதனைச் சூழவுள்ள காரைநகர் தவிர்ந்த மற்றைய தீவுகளில் வாழும் பிராமணர்கள், துன்னாலை எனும் கிராமத்தில் வாழும் பிராமணர்கள், வேறு சில கிராமங்களில் வாழும் பிராமணர்கள் ஆகியோரை மற்றைய ஈழம் வாழ் பிராமணர்கள் ஏற்றுக் கொள்ளாத நிலை இன்றுவரை காணப்படுகிறது. எனினும் இப்பிராமணர்களுடன் கடந்த சில பத்தாண்டுகளில் விவாஹபந்தங்களும் நடைபெற்று வருகின்றன.

தேவேந்திரமுனையில் இருந்த பெரிய விஷ்ணு கோவில் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டபோது, அக்கோவிலைச் சார்ந்திருந்த பிராமணக் குடும்பங்களின் தற்போதைய சந்ததியினர் சிங்கள மக்களுடன் சங்கமமாகிவிட்டனர் எனினும் அவர்களின் விஷ்ணு ஸஹஸ்ரநாமம் ஓதும் வழக்கம் இன்னும் சில குடும்பங்களில் பேணப்படுகிறது. Bamunuge என்ற surname சிங்களவர்களின் பிராமண கலப்பைச் சுட்டுவதாகும். Brahmanayage என்ற surname - உம் அதனையே குறிக்கிறது.

வெள்ளாளர் அல்லது வேளாளர், பெரும்பாலும் வேளாண்மை செய்தலையே குலத் தொழிலாகக் கொண்டிருந்தனர். இவர்களில் ஒரு பிரிவினர் மாமிச உணவை ஏற்றுக் கொள்ளாதவர்களாகையால் சைவ வேளாளர் எனப்படுகின்றனர். தமிழ் ஈழப் பிரதேசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கணும் வேளாளர் பரந்து வாழ்கின்றனர். வெள்ளாங்குளம், வெள்ளாம்போக்கட்டி போன்ற பல கிராமப் பெயர்கள் இவர்களின் பெயரில் உள்ளன.

சிவியார் (அரசர்களுக்குச் சிவிகை காவுவோர்) யாழ்ப்பாண நகரில் சிவியார் தெருவில் பெருமளவு வாழ்ந்தனர். மடைப்பள்ளியார் (அரசர்களுக்குச் சமையல் செய்வோர்) மிகவும் குறைந்த தொகையினராக யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தனர். மறவர் எனும் போர் மரபினர் சாவகச்சேரியிலுள்ள மறவன்புலம், மறவநுணாவில் ஆகிய இடங்களில் வாழ்ந்து அரசர்களின் படைகளில் போர் வீரர்களாகப் பணியாற்றினர். கைக்கோளர்கள் எனும் மற்றும் ஒரு பிரிவினர் யாழ்ப்பாணம் நல்லூர்ப் பிரதேசத்தில் வாழ்பவராவர். இவர்கள் மற்றும் சிவியார், மடைப்பள்ளியார், மறவர் ஆகிய யாவரும் வெள்ளாள சமூகத்துடன் இரண்டறக் கலந்துள்ளனர். இந்தியாவில், தமிழ் நாட்டில் வெள்ளாளர்கள் "பிள்ளைமார்" எனவும் அழைக்கப்படுகின்றனர்.

கோவியர் என்ற சொல் கோபியர் (இடையர்கள் - மந்தைகள் (மாடு-ஆடு) மேய்ப்பவர்கள்) என்பதன் திரிபு ஆகும். இவர்கள் பெரும்பாலும் மந்தைகளை மேய்த்து அவ்வருமானத்தில் தங்கி வாழும் ஓர் சமூகமாகவே இருந்தனர். தற்போது விவசாயக் கூலிகளாகவும் இருந்து வருகின்றனர். ஈழத் தமிழகம் எங்கும் பரந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து வரும் இவர்கள் பகவான் கிருஷ்ணரின் வம்ஸத்தவர்கள் என்றும் கூறிக்கொள்வதில் பெருமை கொள்கின்றனர். இந்தியத் தமிழ் நாட்டில் இந்தச் சாதியினர் கோனார் என அழைக்கப்படுகின்றனர். கோனார் என்பது "கோபியனார்" என்பதன் திரிபு ஆகும். இந்தியாவின் மற்றைய மாநிலங்களில் இவர்கள் யாதவர்களாகையால் "யாதவ்" என்ற பின் இணைப்பைத் தங்கள் பெயர்களுடன் ஆண்கள் சேர்த்துக் கொள்கின்றனர். தமிழ் நாட்டில் கோனார் என்ற பின்இணைப்பு இச்சாதியினரின் ஆண்களின் பெயர்களில் இருக்கும். ஈழத் தமிழகத்தில் இச்சாதியினரின் பெயர்களில் இவ்வாறான பின்னிணைப்பு ஏதும் இருப்பதில்லை.

சேணியர் (நெசவுத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள்) தற்போது வேளாளர் சமூகத்துடன் இரண்டறக் கலந்துவிட்டனர். யாழ்ப்பாண நகர் சேணியதெரு, பல சேணியர் குடும்பங்களைக் கொண்டிருந்தது.

செட்டியார்கள் ஆதியில் வணிகம் செய்யும் ஓர் சமூகமாக இருந்தனர். எனினும் காலப்போக்கில் விவசாயத்தையும் மேற்கொண்டு வாழும் ஓர் சமூகமாக மாறினர். ஈழத்துச் செட்டியார்கள் பெரும்பாலும் சைவ உணவினராவர். சாவகச்சேரியில் மட்டுவில், யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய இடங்களில் இவர்கள் பெருமளவு வாழ்கின்றனர். வண்ணார்பண்ணை சிவன் கோவில் இவர்களது நிர்வாகத்தில் உள்ளது. மெய்கண்டான் எனும் புகழ்பெற்ற பதிப்பகமும் இவர்களது நிர்வாகத்தில் உள்ளது. காலவோட்டத்தில் இச்சமூகம் வேளாள சமூகத்துடன் சங்கமமாகிவிட்டது. செட்டிகுளம், செட்டிபாளையம், செட்டியார்புலம், செட்டியார்மடம், செட்டிவயல், செட்டித்தோட்டம், செட்டியகுறிச்சி போன்ற பல கிராமங்கள் ஈழத் தமிழகத்திலும் ஹெற்றிப்பொல (சிங்களத்தில் ஹெற்றி - செட்டி; பொல - புலம்) ஹெற்றியாவத்த (வத்த - தோட்டம்) ஹெற்றிகம (gama - கிராமம்) போன்ற கிராமப் பெயர்கள் சிங்களப் பிரதேசத்திலும் இச்சாதியினரின் பெயர் கொண்ட ஊர்கள் ஆகும். சிங்கள மக்களில் ஹெற்றிகே (Hettige - செட்டியின்) எனும் குடும்பப் பெயர் கொண்டவர்கள் செட்டியப் பூர்விகம் உள்ளவர்கள் எனக் கூறப்படுகிறது.

கொழும்புச் செட்டிகள் (இவர்கள் செட்டியார்கள் அல்லர்) எனும் சமூகம், கொழும்பில் இற்றைக்கு 200 வருடங்களுக்கு முன் ஆடிவேல் விழாவை முன்னின்று நடத்திய ஓர் சமூகமாகும், இப்போது இவர்கள் தமிழ் மறந்த கத்தோலிக்கர்களாக மாறியபோதும் அவர்களது குடும்பப் பெயர்கள் (surnames) இன்றும் இந்துப் பெயர்களையே கொண்டுள்ளன. உதாரணங்களாவன: காசிச்செட்டி, பெருமாள்செட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 200 வருடங்களுக்கு உட்பட்ட காலத்தில், நகரத்தார் எனப்படும் தமிழ் நாட்டைச் (செட்டிநாடு) சேர்ந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் இலங்கையின் நகரப் பகுதிகளில் குடியேறிப் பல்துறை சார்ந்த வணிகங்களில் ஈடுபட்டனர். கொழும்பில் செட்டியார்தெரு, காலியில் கிட்டங்கி ஆகியவை இதற்குச் சிறந்த உதாரணங்களாகும்.

வாணியர் வித்துகளில் இருந்து எண்ணைகளை உற்பத்தி செய்து விற்பவர்கள் ஆவர். ஆனைக்கோட்டை, பிரான்பற்றை (காரைநகர்), தும்பளை (பருத்தித்துறை) ஆகிய இடங்களில் இக்குடும்பங்கள் பல உள்ளன. இவர்கள் சாண்டார் எனவும் அழைக்கப்படுவர். சாண்டார்போக்கட்டி, சாண்டான்குளம் போன்றவை இவர்களின் பேரிலான கிராமங்களாகும்.

கரையார் தமிழ் ஈழக் கடற்கரையோரக் கிராமங்களில் வாழ்ந்து மீன் மற்றும் கடல் வாழ் உயிரினங்களைப் பிடித்து உணவுக்காக விற்கும் மீனவர்கள் அல்லது செம்படவர்கள் ஆவர். கடற்கரை வாழ் மக்களாகையால் தமிழ் ஈழத்தில் இவர்கள் கரையார் என அழைக்கப்படுகின்றனர். இதே சமூகத்தவர் இந்தியாவின் தமிழ் நாட்டில் பரதவர் அல்லது பரவர் எனப்படுவர். தமிழ் நாட்டிலிருந்து காலங்காலமாக சிங்களப் பிரதேசங்களின் கடற்கரை கிராமங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேறிய பரவர்கள் காலவோட்டத்தில் சிங்கள மக்களுடன் இரண்டறக் கலந்தபின் "கராவ" (Karawa) இனத்தவர்கள் என அழைக்கப்படுகின்றனர். தமிழ் ஈழக் கடற்கரைக் கிராமங்களில் மன்னார், யாழ்ப்பாணத்திலுள்ள கரையூர், பாஷையூர், குருநகர், (உடப்பு தவிர்ந்த) சிலாபம், புத்தளம், நீர்கொழும்பு மாவட்டங்களிலுள்ள கரையோரக் கிராமங்கள் ஆகிய ஊர்களில் வாழும் மீனவர்கள் யாவரும் கத்தோலிக்க மதத்தினராவர். மன்னாரில் உள்ள பழமையான, புகழ்பெற்ற செபமாலை மாதா கோவில் கொண்டுள்ள மடுத்திருப்பதி (Madhu Church), புத்தளம் மாவட்டத்திலுள்ள புகழ்பெற்ற தலைவில்லு சந்தனமாதா திருப்பதி (St Ann's Church) ஆகியவை இவர்களால் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன.

உடப்பு இந்து மதம் சார்ந்த ஓர் கிராமமாகத் திகழ்வதுடன் அங்குள்ள புராதன திரௌபதி அம்மன் கோவில் மிகப் பிரபல்யமானது.

வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு ஆகிய ஊர்களில் வாழும் மீனவக் குடும்பங்கள் தீவிர இந்துக்களாவர். தொண்டைமானாற்றில் உள்ள பழமை வாய்ந்த புகழ்பெற்ற செல்வச்சன்னிதி முருகன் ஆலயம் இவர்களால் பாதுகாக்கப்படுவது மட்டுமன்றி இச்சமூகத்தினரே பூசகர்களாகவும் பணியாற்றுகின்றனர். கதிர்காமத்தில் வேடுவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது வாயைக் கட்டிப் பூசை செய்வது போன்று இங்கும் வாயைக் கட்டிப் பூசைகள் நடைபெறுகின்றன.

கடலில் முத்துக் குளித்தல், சங்கு, சிப்பி, முருகைக்கல் ஆகியவற்றைக் கடலுக்கடியிலிருந்து சேகரித்தல், சுண்ணாம்பு தயாரித்தல் ஆகியவை முக்குவர் அல்லது முக்கியர்களது சீவனோபாயத் தொழில்களாகும். தமிழ் ஈழக்கரை ஓரங்களில் வாழும் இவர்கள் கரையார் வகுப்பினருடன் ஒன்றாகி வருகின்றனர். முத்துக் குளித்தலில் (சிலாபம், மன்னார் வளைகுடா) இவர்களின் பங்கு மிகவும் முக்கியமானது.

பள்ளர் பெரும்பாலும் விவசாயக் கூலிகளாகவே வாழ்ந்தவர்கள். கவிதைகளில் "பள்ளு" எனும் வகை இவர்களது விவசாய வாழ்க்கை முறைகளை அடிப்படையாகக் கொண்டவை. பொருளாதாரக் கஷ்டங்கள் காரணமாகப் பனை/தென்னை மரங்களில் ஏறி அவற்றின் உற்பத்திகளைப் பெறுதல், பதநீர் சேகரித்து விற்றல் போன்ற தொழில்களையும் மேற்கொண்டவர்கள். நளவர்ளும் (நழுவுதல்- மரத்தில் ஏறுதல் / இறங்குதல்). பனை/ தென்னை ஏறுதல், கள்/பதநீர் வியாபாரம் போன்றவற்றைச் செய்பவராவார். வண்ணார்(சலவைத் தொழிலாளர்களான இவர்கள்) தமிழ் ஈழத்தின் பல இடங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றனர். வண்ணார்பண்ணை, வண்ணாதிடல், வண்ணான்குளம் போன்ற ஊர்ப்பெயர்கள் இவர்களின் பெயரைக் கொண்டவையாகும்.

நாவிதர் அல்லது அம்பட்டர் (முடி திருத்தற் கலைஞர்களான இவர்கள்) தமிழ் ஈழத்தின் பல பகுதிகளிலும் வாழ்கின்றனர். வவுனிக்குளம் பிரதேசம் ஒரு காலத்தில் இவ்வகுப்பினரால் நிறைந்து இருந்ததாகக் கூறுவர். நாவிதன்வெளி, அம்பட்டன்துரவு போன்ற ஊர்கள் இவர்களின் பெயர் கொண்ட சில ஊர்களாகும்.

பறையர் போர்ப்பறை, மங்கலப்பறை, மரணப்பறை எனப் பலவகைகளில் "பறை" எனும் தோல் வாத்தியத்தை வாசிக்கும் திறமை பெற்றிருந்த ஓர் சமூகமாகும். பறையுடன் இணைந்து வாசிக்கப்படும் சிறிய நாதஸ்வரம் போன்ற ஓர் ஊதும் வாத்தியமும் இற்றைக்கு 50 வருடங்கள் முன்புவரை பழக்கத்தில் இருந்தது. இக்காலத்தில், தேவையின்மை காரணமாக இக்கலைகள் பல அழிந்து போய்விட்டன. இதனால் இச்சமூகம் பொருளாதாரப் பின்னடைவுக்குட்பட்டது. இப்போது பறைமேளம், மரண இறுதி யாத்திரையின் போதும் சில கோவில்களிலும் மட்டுமே வாசிக்கப்படுகின்றது. பறையனாலங்குளம், பறையவயல் போன்ற ஊர்ப்பெயர்கள் இவர்களின் பெயரைக் கொண்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைவேளாளர் நாதஸ்வர, தவில் கலைஞர்களாவர். மாவிட்டபுரம், அளவெட்டி, இணுவில், நாச்சிமார் கோவில், சங்கத்தானை (சாவகச்சேரி) போன்ற பல கிராமங்களில் இவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

தட்டார் பொன்னில் ஆபரணங்கள், விக்கிரகங்கள், உபகரணங்கள் செய்பவர்களாகையால் பொற்கொல்லர்கள் அல்லது பத்தர்கள் எனவும் அழைக்கப்படுவர். மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் (தட்டாதெரு), சாவகச்சேரி (சங்கத்தானை) ஆகிய இடங்களில் இவர்கள் பெருமளவு வாழ்கின்றனர். தட்டான்குளம் இச்சாதியினரின் பெயர் கொண்ட ஒரு கிராமமாகும்.

கொல்லர்கள் இரும்பு வேலை செய்பவர்கள். கொல்லன்கலட்டி இச்சாதியினரின் பெயருள்ள ஒரு கிராமமாகும். நீர்வேலியில் இவர்களும், தச்சர்களும் பெருமளவு வாழ்கின்றனர். கன்னார் என்பவர்கள் பித்தளை, வெண்கலம் போன்ற உலோக வேலைகளைச் செய்பவர்களாவர். கன்னாதிட்டி (யாழ்ப்பாணம்), கன்னாரத்தெரு (கொழும்பு) போன்ற பெயர்கள் இவ்வகுப்பினர் வாழும் இடங்களைக் குறிக்கின்றன

தச்சர்கள் மரத்தளபாடங்கள், கதவுகள், சாரளங்கள், கூரை, கோவில் வாகனங்கள் போன்றவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JPL

உருவாக்கும் கை வினைஞர்களாவர். கிழக்கு மாகாணத்தில் இவர்கள் ஓடாவிமார் என அழைக்கப்படுகின்றனர். தமிழீழத்தின் பல கிராமங்களில் இச்சாதியினர் வாழ்கின்றனர். தச்சன்தோப்பு, தச்சஅடம்பன், தச்சன்குளம் போன்ற கிராமங்கள் இச்சாதியினரின் பெயருள்ளவை.

குயவர் மட்பாத்திரங்கள், மண் பொம்மைகள் செய்பவர்கள். குயவமடம் என்பது இவர்களது சாதிப்பெயர் கொண்ட ஒரு கிராமமாகும். இப்பிரிவினைகளைக் கைவிட்டு ஒரு சமுகமாக வாழவேண்டியது காலத்தின் தேவையாகும்.

பெருந்தொகையான தமிழ்ப் பெயர் கொண்ட கிராமங்களும் சிங்களப் பிரதேசங்களில் உள்ளன. சில உதாரணங்கள் பின்வருமாறு :

Bulankulama - புலாங்குளம் - விளாங்குளம்

Monnekulama - மொன்னெகுளம் - மணல்க் குளம்

Iraalkuliya - இறால்குளிய - இறால் குழி

Nalluruwa - நல்லூருவ - நல்லூர்

சிங்களப் பிரதேசங்களில் இவ்வாறான கிராமப் பெயர்கள் வரலாற்றின் ஏதோ ஒரு காலகட்டத்தில் அக்கிராமங்கள் தமிழர் கிராமங்களாக இருந்ததையே குறிக்கின்றன. கௌதம புத்தர் காலத்துக்கு முந்திய மிகப் பழமை வாய்ந்த இலங்கையின் புகழ்பெற்ற இந்துக் கோவில்கள் திருக்கோணேஸ்வரம் (பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற ஸ்தலம் - இராவணனாலும் அவனது மூதாதையராலும் வழிபடப்பட்ட ஸ்தலம்), திருக்கேதீஸ்வரம் (பாலாவிதீர்த்தம்-பாடல்பெற்ற ஸ்தலம்), முன்னேஸ்வரம் (பிரமஹத்தி தோஷம் நீங்க இராமபிரான் வழிபட்ட ஸ்தலம்), நகுலேஸ்வரம், தொண்டீஸ்வரம்(அழிந்தநிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது), கதிர்காமம் (அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடல் பெற்ற ஸ்தலம் - வள்ளிமலை - முருகக் கடவுளின் மனைவி வள்ளி அவதரித்த கிராமம்; கௌதாரிமுனை சிவன் கோவில் (அழிந்த நிலையில் உள்ளது - பூநகரி) ஆகும் (Pushparatnam P, 1993).

முந்திய மிகப்பழமை வாய்ந்த புராதன சிவன் கோவில்கள் இரண்டு அழிந்த நிலையில் உள்ளன (பொலன்நறுவை). ஆயிரங்கால் மண்டபத்துடன் கூடிய புராதன விஷ்ணு கோவில், 500 வருடங்கள் முன் போர்த்துக்கேயரால் இடித்தழிக்கப்பட்டது (தேவேந்திரமுனை). நயினாதீவு, நாகதீபம், "மணிபல்லவம்" என மணிமேகலை காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. இங்குள்ள பௌத்த விஹாரை, அக்காலத்தில் தமிழர் பௌத்த மதத்தினராக இருந்ததை உறுதிப்படுத்துகிறது (Schalk, P.2013, Velluppillai, A, 1990).

இவற்றில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நாயன்மார்களால் பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற தலங்கள் திருகோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகும். அருணகிரிநாதரால் கதிர்காமம், வள்ளிமலை என்பனவும் பாடப்பட்டுள்ளன.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் நாகதீப பௌத்த விஹாரைக்கு மிகவும் முற்பட்டது. நாகர்கோவிலில் (பருத்தித்துறை) மிகப் புராதனமான கோவில் ஒன்று உள்ளது. இவ்வாறான கௌதம புத்தர் காலத்துக்கு முற்பட்ட பல புராதன ஆலயங்கள் இலங்கை முற்காலத்தில் ஓர் முழுமையான தமிழ் நாடாகத் திகழ்ந்ததற்கு வலுவான சான்றுகளாக அமைகின்றன.

இலங்கையில் மேலும் பல புராதன கோவில்கள் உள்ளன. உதாரணங்கள்: மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் (காங்கேசன்துறை), வாரிவனேஸ்வரம் சிவன் கோவில் (சாவகச்சேரி), வல்லிபுரம் விஷ்ணு கோவில் (பருத்தித்துறை), வரதராஜப் பெருமாள் கோவில் (பொன்னாலை), உருத்திரபுரம் சிவன்கோவில் (கிளிநொச்சி).

நல்லூர் கந்தசுவாமி கோவில் கோட்டே அரசன் 6-ம் புவனேகபாகுவால் (கி.பி. 1472 - கி.பி. 1480) புனர்நிர்மாணம் செய்யப்பட்டது எனக் கூறப்படுகிறது. ஆனால் யாழ்ப்பாண வைபவமாலை (Mayilvagana Pulavar, 1736) எனும் யாழ்ப்பாணச் சரித்திரத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கூறும் நூல் நல்லூர் முருகன் ஆலயம் கி.மு. 948-ல் (சக வருஷம் 870) ஆரியச் சக்கரவர்த்தி எனும் யாழ்ப்பாண அரசரின் கீழ் கட்டப்பட்டது எனத் தெளிவுபடத் தெரிவிக்கிறது. யாழ்ப்பாண வைபவமாலை. தெட்சண கைலாய மான்மியம் ஆகியவை இலங்கைத் தமிழர் சரித்திரத்தை எடுத்துக் கூறும் நூல்கள் ஆகும் (Arumugam S, 1999). எனவே நல்லூர் முருகன் ஆலயம் ஈழத்தமிழ் நாட்டில் ஈழத்தமிழர்களாகலேயே அமைக்கப்பட்டதாகும்.

மேலும் பல கோவில்கள் உள்ளன. காரைநகர் சிவன் கோவில் (ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படுகிறது) புதூர் நாகதம்பிரான் கோவில் (கிளிநொச்சி), புளியம் பொக்கணை நாகதம்பிரான் கோவில் (பரந்தன்), வற்றாப்பளை அம்மன் கோவில் (முல்லைத்தீவு), ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன் கோவில் (முல்லைத்தீவு), வெருகல் கந்தசாமிகோவில் (முதூர்), உகந்தை முருகன் கோவில் (பொத்துவில்), மாமாங்கேஸ்வரர் கோவில் (மட்டக்களப்பு) பாண்டிருப்பு கண்ணகை அம்மன் கோவில் (கல்முனை), திரௌபதி அம்மன் கோவில் (உடப்பு), பறாளாய் விநாயகர் கோவில் (சுழிபுரம்), திருநெல்வேலி சிவன் கோவில் (திருநெல்வேலி), அரசகேசரிப் பிள்ளையார் கோவில் (நீர்வேலி), சட்டநாதர் சிவன் கோவில் (நல்லூர்), வண்ணார்பண்ணை சிவன் கோவில் (யாழ்ப்பாணம்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை, இப்பிரதேசங்கள் முழுவதும் தமிழரின் வாழ்க்கையைச் சித்தரிக்கின்றது.

தமிழ் பிராமி வரிவடிவங்கள் (எழுத்துகள்) சிங்கள எழுத்துக்களிலும் பார்க்க காலத்தால் மிகத் தொன்மையானவையாகும். இலங்கையின் சிங்களப் பிரதேசங்களிற் கண்டு பிடிக்கப்படும் தமிழ் பிராமி எழுத்துக்களைக் கொண்ட கல்வெட்டுகள், சுட்ட களிமண் எழுத்துப் படிவங்கள் (உதாரணம்: கதிர்காமத்துக்கு அண்மையிலுள்ள திஸ்ஸமஹாராமையில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ் பிராமி எழுத்துப் பதிவுகள்) இலங்கையின் பூர்வீகக் குடிகள் (ஆதி மண்ணின் மைந்தர்கள்) ஈழத் தமிழர்களே என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி உறுதிப்படுத்துகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 2

# அனுராதபுரமும் தமிழ் மக்களும்

இந்தியாவில் மௌரிய சாம்ராஜ்யப் பேராசை உருவாக்கிய அசோகச் சக்கரவர்த்தி (கி.மு.3-ம் நூற்றாண்டு) யுத்த முனைகளில் நேரடியாகக் கண்ட மனித அவலங்களையும் கேட்ட மரண ஓலங்களையும் தாங்கமுடியாமல் பௌத்த சமயத்தைத் தழுவினார் என்பது வரலாறு. பௌத்த மதத்தை இலங்கையிற் பரப்புமுகமாக அவரது மகன் மஹிந்தரையும் மகள் சங்கமித்திரையையும் புத்தர் ஞானம் பெற்ற வெள்ளரச மரத்தின் கிளை ஒன்றுடன் (கி.மு.250 - கி.மு.210) இலங்கைக்கு அனுப்பி வைத்தார். இலங்கையில் அவர்களை வரவேற்றது அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த "திசையன்" அல்லது "தீசன்" என்னும் தமிழ் மன்னனாவான். அப்போது அனுராதபுரம் ஓர் தமிழர் நகரமாகவே இருந்தது எனவும் அனுராதபுரத்தில் இருந்த விநாயகர் கோவிலில் அப்புனித மரக்கிளை வரவேற்கப்பட்டு திவாகரன் எனும் தமிழ்ப் பிராமணரால் பூமிபூஜை செய்யப்பட்டது எனவும் அறிகிறோம். தீசன் பௌத்த மதத்தைத் தழுவியதால் "தேவநம்பி" என அசோகச் சக்கரவர்த்தியால் புகழப்பட்டான். பிற்காலத்தில் பாளி மொழியில் எழுதப்பட்ட மஹாவம்ஸம் எனும் நூலில் தீசன் "தேவநம்பிய திஸ்ஸ" எனும் சிங்கள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனாகத் திரிக்கப்பட்டது வேதனைக்குரிய உண்மையாகும். புத்தர் வாழ்ந்த காலத்திலேயே பௌத்த மதம் இலங்கையுட் புகுத்தப்பட்டு ஈழத் தமிழர் பலரால் பின்பற்றப்பட்டது. அப்போது சிங்களவர்கள் எனும் ஓர் இனம் இலங்கையில் இருக்கவில்லை (தோன்றவில்லை). அசோகச் சக்கரவர்த்தியின் முயற்சியின் பின் இலங்கையில் பௌத்த மதம் வலுப்பெற்றது.

இதன் பின் சில நூற்றாண்டுகளுக்குப் பின் தென் இலங்கையின் உறுஹுணைப் பிரதேசத்தை ஆண்ட சிங்கள மன்னனான "துஷ்ட கைமுனு" என்பவன் அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த தமிழ் மன்னனான எல்லாளனுடன், கி.மு.161-இல் அனுராதபுரதத்தில் நேரடி யுத்தத்தில் ஈடுபட்டான். இளைஞனான துஷ்ட கைமுனு வயோதிபனான எல்லாளனை யுத்தத்தில் கொல்ல முடிந்ததெனினும், இனவாத எண்ணம் ஏதுமின்றி எல்லாளனின் நீதி தவறாத ஆட்சியை மதித்து அவன் கொல்லப்பட்ட "ருவான் வெலிசெய" என்ற இடத்தில் எல்லாளனுக்குச் சமாதி அமைத்து யாவரும் எல்லாளனின் சமாதிக்கு மரியாதை செய்ய வகைசெய்தான். அனுராதபுரத்தில் வாழ்ந்த தமிழர்கள் எவருக்கும் துஷ்ட கைமுனுவின் படைகள் துன்புறுத்தல்களோ கஷ்டங்களோ ஏற்படுத்தியதாகச் சரித்திரம் இல்லை. எல்லாளன் உட்பட எல்லாத் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசர்களும் பௌத்த வழிபாட்டு தலங்களை மிகுந்த கண்ணியத்துடன் பாதுகாத்ததன் பயனாகவே புராதன பௌத்த தலங்கள் அனுராதபுரதத்திலும் வேறு இடங்களிலும் இன்றும் அதே பொலிவுடன் விளங்குகின்றன.

இலங்கையில் முற்காலத்தில் நடைபெற்ற யுத்தங்கள் அரசர்களுக்கு இடையிலான யுத்தங்களாகக் கருதப்பட்டனவேயன்றிப் பெரும்பாலும் சிங்கள - தமிழ் இனவாதக் கண்ணோடு நோக்கப்பட்ட தன்மை குறைவாகவே இருந்தது. அரசர்களிடையே யுத்தங்கள் நடைபெற்றபோது பல சந்தர்ப்பங்களில் சிங்கள அரசர்களுக்குத் தமிழ் மன்னர்கள் படையணிகளும், உதவிகளும் வழங்கியுள்ளனர். சில குறுகிய மனம் கொண்ட சிங்களச் சரித்திர ஆசிரியர்கள், சில பௌத்த பிக்குகள், மக்களின் மனத்தில் சிங்கள இன வெறியைத் தூண்டி அரசியல் ஆதாயம் தேடும் சிங்கள அரசியல்வாதிகள் ஆகியோரே சிங்கள பௌத்த இனவெறியாட்டங்களுக்கு மூலகாரணமாவர்.

அனுராதபுரம் புராதன காலத்தில் இருந்து, இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரமடைந்த 1948-ம் ஆண்டுக்குச் சில வருடங்கள் பின்வரை (up to about 60 years ago) ஓர் பூரண தமிழ்ப் பிரதேசமாகவே இருந்தது. அப்போது அனுராதபுர நகரசபையின் அங்கத்தவர்கள் யாவரும் (12 பேர்) தமிழர்களாகவே இருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

SWRD பண்டாரநாயக்க பிரதமராக இருந்த போது அவரால் திட்டமிடப்பட்ட "அனுராதபுரம் புனித பௌத்த நகரத் திட்டத்தின்" கீழ் தமிழர்கள் யாவரும் பலவந்தமாக அகற்றப்பட்டு அங்கு பௌத்த சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். இதனால் அனுராதபுர நகரம் பௌத்த சிங்கள மயமாக்கப்பட்டுவிட்டது. அனுராதபுரம் தமிழர் மயமாக இருந்த காலக் கடைசி நகரபிதா (Mayor) சிற்றம்பலம் எனும் தமிழராவர். தற்போது அனுராதபுர நகரசபையின் அங்கத்தவர்கள் யாவரும் பௌத்த சிங்களவர்களே. எனினும் அங்கத்தவர் தொகுதிகள் (wards) மட்டும் இன்னும் அவற்றின் பழைய தமிழ்ப் பெயர்களைத் தாங்கி நிற்கின்றன (மாவடி, ஒட்டுப்பள்ளம், கரடிக்குளம், கோப்பைக்குளம், சீப்புக்குளம் இன்னோரன்னவை). அனுராதபுரம் மிகக் குறுகிய காலத்தில் தமிழ்ப் பிரதேசத்திலிருந்து சிங்களப் பிரதேசமாக மாற்றப்பட்டு விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 3

# இலங்கையின் வடமேல் மாகாணமும் தமிழர்களும்

இலங்கையின் வடமேல் மாகாணம் இலங்கை சுதந்திரமடைந்த 1948-ம் ஆண்டின் பின் ஒரு சில பத்தாண்டுகள் வரை அதன் கரையோர மாவட்டங்கள் அனைத்தையும் ஓர் பூரண தமிழ்ப் பிரதேசமாகக் கொண்டிருந்தது. அத்துடன் இத் தமிழ்ப் பிரதேசம் பூரண தமிழ்ப் பிரதேசமான வடமாகாணத்துடன் ஓர் தொடர் நிலப்பரப்பாக இருந்தது. இத் தமிழ்ப் பிரதேசம் தெற்கே மேல்மாகாணத்துள் நீர்கொழும்பு, வத்தளை போன்ற கத்தோலிக்கத் தமிழ் ஊர்கள்வரை பரந்திருந்தது. வடமேல் மாகாணத்தில் உடப்பு திரௌபதி அம்மன் கோவில், மற்றும் இராமாயண காலத்துக்கு முற்பட்ட சிலாபத்தின் மாயவன் ஆற்றங்கரையில் (இன்று தெதுறு ஓயா) உள்ள வடிவாம்பிகா ஸமேத முன்னைநாதர் கோவில் கொண்டுள்ள முன்னேஸ்வரம் ஆலயம் ஆகியவை இத்தமிழ்ப் பிரதேசத்தின் முக்கிய க்ஷேத்திரங்களாக இன்றுவரை திகழ்கின்றன.

இம்மாகாணத்தில் இருந்த சைமன் காசிச்செட்டி போன்ற பல தமிழ்ப் புலவர்கள் இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்புவரை சிறந்த தமிழ்த் தொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றி உள்ளனர். சைமன் காசிச்செட்டி கற்பிட்டியைச் சேர்ந்தவராவர்.

அரசாங்கத் தூண்டுதல்கள், சிங்களக் குடியேற்றங்கள், அரசியல் நிர்ப்புந்தங்கள் ஆகியவை காரணமாகப் பெரும்பான்மையான தமிழ்க் குடும்பங்கள் தங்களைச் சிங்களவர்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளன. எனினும் பல குடும்பங்களில் பழைய தமிழ் ஏட்டுச் சுவடிகள், தமிழ்க் கிராமியக் கூத்துகள் ஆகியவை சமீபகாலம் வரை பேணப்பட்டு வந்தன. இன்றும் இவை பல குடும்பங்களில் இருக்கக் கூடும். காணி உறுதிகள் (Land Deeds), உயில்கள் (Wills) யாவும் சமீபகாலம் வரை தனித் தமிழிலேயே இருந்தன.

வடமேல் மாகாணத்தின் கரையோர மாவட்டங்களில் ஊர்ப் பெயர்கள் யாவும் மாற்றங்கள் அதிகமின்றித் தமிழாகவே உள்ளது. சில உதாரணங்களாவன: குதிரைமலை, தேரோடும் வீதி, நுரைச்சோலை, கற்பிட்டி, மருதங்குளம், கருக்குப்பனை, பொன்பரப்பி, நாகவில்லு, நயினார் மடம், வண்ணத்திவில்லு, கரடிப்பூவல், சேனைக்குடியிருப்பு, இலவங்குளம்.

கஷ்டங்கள் நேரும் போது கந்தஸஷ்டி கவசம் ஓதும் பழக்கம் பல சிங்களவர்களாகத் தம்மை பிரகடனப்படுத்திய தமிழர் குடும்பங்களில் இன்றும் உள்ளது. தொடர் தமிழ் நிலப்பரப்பாக இருந்த வடக்கு, வடமேற்கு மாகாணங்களுக்கு இடையிலான எல்லைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி முழுவதும் வடமேல் மாகாணத்தினுள் உள்ள பொன்பரப்பிப்பற்றுள் பெருமளவு சிங்களக் குடியேற்றம், இரு மாகாணங்களையும் பிரிப்பதற்காக, அப்போது விவசாய, காணி அமைச்சராகவிருந்த C.P.de Silva என்பவரால் திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்டது. இக் குடியேற்றவாசிகளில் மிகப் பெரும்பான்மையினர் கம்பஹா (Gampaha), மாத்தறை (Matara) பிரதேசங்களில் இருந்து வந்தவர்களாவர். புத்தளம் நகரின் மையப் பகுதியில் தமிழர்களால் தமிழ் மாணவர்களுக்கெனக் கட்டப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்த பிரபல St.Andrew's College அரசினால் சுவீகரிக்கப்பட்டு இக்குடியேற்றவாசிகளுக்காக ஓர் பூரண சிங்களக் கல்லூரியாக மாற்றப்பட்டது. தமிழ் ஊர்களும் கிராமங்களும் முற்றாக சிங்கள மயமாக்கப்படுகின்றது. உடப்பு என்னும் சிறிய ஊரும் முற்றாக அழிந்து போகும் நிலை தோன்றி உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA

# அத்தியாயம் 4

# இலங்கை முஸ்லிம்கள்

முஸ்லிம்கள் (இஸ்லாமியர்கள்) இலங்கையின் எல்லா மாகாணங்களிலும் பரந்து வாழ்கின்றனர். இச்சமுதாயத்தவர் பெரும்பாலும் வியாபாரத்தையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.

எனினும் இவர்களிற் சிலர், பெரும்பாலும் கிழக்கு மாகாணத்தவர்கள், விவசாயத்தையே தொழிலாகக் கொண்டுள்ளனர். அவர்களது தாய்மொழி தமிழ் ஆகும். முற்றுமுழுதான சிங்களச் சூழலிலும் கூட இஸ்லாமியர்கள் தமது தமிழ் பேசும் தனித்துவத்தைப் பல கஷ்டங்களுக்கு மத்தியில் இன்றும் கூடப் பேணி வருகின்றனர்.

இலங்கை அரசு, நன்கு திட்டமிடப்பட்ட பிரசாரங்கள் மூலம், இலங்கை முஸ்லிம்கள், சிங்களவர்களுக்கும் அராபியர்களுக்கும் இடையிலான திருமண உறவுகளால் ஏற்பட்ட வழித்தோன்றல்கள் என்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்த எல்லாவகையிலும் முனைந்து நிற்கிறது. மேற்படி பிரசாரம் உண்மை சார்ந்தது எனக் கொள்வோமாயின், அராபியருக்கும் சிங்களவருக்கும் இடையிலான மண உறவால் உண்டான சந்ததியினர் அரபு அல்லது சிங்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அரபு, சிங்களம் ஆகிய இரண்டும் கலந்தவொரு மொழி ஆகியவற்றில் ஒன்றைப் பேச்சு மொழியாகக் கொண்டிருத்தல் வேண்டும். இது உண்மைக்குப் புறம்பானது. ஏனெனில் இலங்கை இஸ்லாமியரின் தாய்மொழி தமிழாகவே உள்ளது. அவர்களது தமிழ் பேசும் தனித்துவம் என்றும் எச்சூழலிலும் பேணப்படுகிறது. இலங்கை அரசின் இத்தவறான பிரசாரத்தின் நோக்கம் இஸ்லாமியர்களை ஒரு பகுதியாகக் கொண்ட தமிழர் சமுதாயத்தைப் பிரித்துச் சிதைத்து அழிப்பதேயாகும்.

இலங்கை முஸ்லிம்கள் உண்மையில் இந்தியத் தமிழ் நாட்டின் கீழக்கரை, காயல் பட்டினம், அதிராம பட்டினம், தங்கச்சி மடம் போன்ற பல இடங்களிலிருந்து பல நூற்றாண்டுகளாக இலங்கையில் குடியேறிய இஸ்லாமியத் தமிழ் மக்களாவர்.

இலங்கையின் முஸ்லிம் தமிழ்க் கல்விமான்களும் புலவர்களும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துக்கு அளப்பரிய சேவைகள் ஆற்றியுள்ளனர்.
உதாரணங்கள்: அசனா லெப்பைப் புலவர், சேகுத்தம்பிப் பாவலர், வித்துவான் அப்துல் ரகுமான், A.M அப்துல் அஸீஸ், கமாலுத்தீன்

எகிப்து நாட்டிலிருந்து பிரித்தானியரால் 19-ம் நூற்றாண்டில் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட ஒரபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஷா (Orabi Basha) என்பவர் இலங்கையிலுள்ள முஸ்லிம்களின் சமய, கலாச்சார மேம்பாடுகளுக்காக "முஸ்லிம் நேசன் (Muslim Nation)" எனும் தமிழ்ப் பத்திரிகையை நடத்தினார்.

இலங்கையில் இஸ்லாமிய மக்கள் செறிந்து வாழும் இடங்களில் சில: எருக்கலம்பிட்டி (மன்னார்), புத்தளம், மூதூர், காத்தான்குடி, கல்முனை, நிந்தாவூர், கம்பளை, அங்குரணை, கலகெதரை, கிரிந்தை, பேருவளை, அளுத்கம, மாளிகாவத்தை.

இலங்கை சுதந்தரமடைந்த பின் வந்த பல்வேறு சிங்கள அரசுகளும் இலங்கையில் உள்ள தமிழ் மக்களை இலங்கை-தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லிம்கள் எனக்கூறு போட்டு அக்கூறுகளை ஒருவருடன் ஒருவர் மோத விட்டுத் தமிழ் இனத்தை வலுவிழக்கச் செய்ய அல்லது முற்றாக அழிக்க எல்லா வகையிலும் முயன்று வருகின்றன. இலங்கை அரசின் நோக்கங்களைத் தெளிவாகத் தெரிந்து கொண்டபோதும் மேற்படி கூறுகளைச் சேர்ந்த சிலர், பணம், பதவி, சலுகைகள் போன்றவற்றிற்காக அரசாங்கத்தின் செயற்பாடுகளுடன் இசைவாக நடந்து கொள்வது மிகுந்த வேதனைக்குரியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 5

# ஈழத் தமிழரும் கேரளமும்

மொழி, கலாச்சாரம், மற்றும் வேறு பல அம்சங்களிலும் ஈழத் தமிழருக்கும் கேரளத்தவருக்கும் மிகுந்த ஒற்றுமைகள் காணப்படுகின்றன. பேச்சு மொழியில் பல உதாரணங்கள் உள்ளன:

| மலையாளம் | தூய தமிழ் |
|---|---|
| மோன் | மகன் |
| மோள் | மகள் |
| இங்ஙனே | இங்கே |
| பறைதல் | பேசுதல் |
| இரித்தல் | இருத்தல் |

நுளம்பு, பாடு போன்ற பல பழைய தமிழ்ச் சொற்கள் இன்றும் ஈழத் தமிழிலும் மலையாளத்திலும் (கேரளா) வழக்கத்தில் உள்ளன. இந்தியத் தமிழ் நாட்டில் இவை வழக்கத்தில் இல்லை.

ஈழத் தமிழ் மக்கள் பேசும் தமிழின் உச்சரிப்புகள், ஓசை வேறுபாடுகள் (accents, intonations) ஆகியவை கேரளாவில் பேசப்படும் தமிழ், மலையாளம் ஆகியவற்றை மிக ஒத்துள்ளன. இதனால் இந்தியத் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் ஈழத் தமிழர்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையாளத்தவர்களிலிருந்து வேறுபடுத்தி அறிதலிற் சிரமமுறுகின்றனர்.

இலங்கைக்கு வியாபார நோக்குடன் 16-ம், 17-ம், 18-ம், நூற்றாண்டுகளில் வந்த ஐரோப்பியர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் (Portugese, Dutch, British) ஆகியோர் ஈழத் தமிழர்களை, அவர்களின் தோற்றம் காரணமாகவும், அவர்கள் பேசிய தமிழின் உச்சரிப்பு, ஓசையமைப்பு ஆகியவை கேரளத்தவரின் தமிழ் அல்லது மலையாளம் போன்றிருந்தமையாலும், மலபாரிகள் (Malabaris) என்றே அழைத்தனர் (Ref: Our Heritage Book II by Pakeman & Mendis தமிழில்: நம் முன்னோர் அளித்த அரும் செல்வம் பகுதி II by பேக்மன் & மென்டிஸ்) கி.பி. 1681-ல் ரொபர்ட் நொக்ஸ் (Robert Knox) எனும் ஆங்கிலேயரால் வரையப்பட்ட இலங்கைப் படத்தில் தமிழர் பிரதேசங்கள் மலபாரிகளின் பிரதேசங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (படம் 5).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**படம் 5 ரொபர்ட் நொக்ஸின் பண்டைய இலங்கையின வரைபடம்**
**(கி.பி.1681)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பல இடங்களின் பெயர்கள் கேரளத்துக்கும் ஈழத்துக்கும் பொதுவாக உள்ளன. உதாரணங்கள் கோவளம், அல்வாய், நாகர்கோவில், பெருங்குளம், நெடுமண்காடு

ஈழத்திலுள்ள இந்துக் கோவில்கள், கேரளத்திலுள்ள இந்துக் கோவில்கள் போன்று, இற்றைக்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்புவரை ராஜ கோபுரங்களைக் கொண்டிருக்கவில்லை. அத்துடன் வழிபாட்டு முறைகளிலும் சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

நாக வழிபாட்டுக்கான (நாக தம்பிரான் - தம்பிரான் (மலையாளம்); அரசன் - தமிழ்) கோவில்கள் ஈழத் தமிழகத்திலும் கேரளத்திலும் மட்டுமே காணப்படுகின்றன. ஈழத்தில் இதற்கான உதாரணங்கள் புதூர் நாக தம்பிரான் கோவில், புளியம் பொக்கனண நாக தம்பிரான் கோவில், நாகர் கோவில்.

ஈழவர் எனும் சமூகத்தவர் கேரள மாநிலம் எங்கும் பரந்து வாழ்கின்றனர். இவர்கள் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் ஈழ நாட்டிலிருந்து (இலங்கையில் இருந்து) மலையாள நாட்டில் (கேரளாவில்) குடியேறியவர்கள் என உறுதிபடத் தெரிவிக்கின்றனர். இவர்களிடையே 1854-ம் ஆண்டில் வயல்வரம் கிராமத்தில் (கேரளா) தோன்றிய நாராயணகுரு எனும் மஹான் இச்சமூகத்தினரின் ஆன்மீக மேம்பாட்டிற்காக இந்து மதத்தில் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்களைச் செய்தார். திருஸ்ஸரர் (கேரளா) கூர்க்கன் சேரியிலுள்ள புராதன மஹேஸ்வர சிவன் கோவில் நாராயணகுரு அவர்களால் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) செய்யப்பட்டது.

ஈழவர்கள் சிங்கள இனம் தோன்றுவதற்கு முன்னரே இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்தார்களா அல்லது அதன் பின்னரா என்பதும், இவ்விடப் பெயர்ச்சிக்கான காரணங்கள் என்ன என்பதும் மேலும் ஆராயப்பட வேண்டிய விஷயங்கள் ஆகும்.

இதே போல பத்தினி (கண்ணகி) அம்மன் வழிபாடு கேரளாவைப் போல் இலங்கையின் வன்னிப் பிரதேசத்திலும் சிங்கள மக்களிடையேயும் காணப்படுகிறது.

ஈழத் தமிழ்ப் பெண்களில் வயதானவர்கள் சேலையை (மார்புக்குக்) குறுக்கே கட்டும் வழக்கம், கேரளத்தில் உள்ளது போல், இன்றும் பல இடங்களில் காணப்படுகிறது.

கேரளத்தவரின் உணவுத் தயாரிப்புகள், உணவுப் பழக்கங்கள் ஆகியவை பெரும்பாலும் ஈழத் தமிழரின் உணவுத் தயாரிப்புகள், உணவுப் பழக்கங்கள் ஆகியவற்றுடன் ஒத்துள்ளது என்பதுடன் இவர்களது உணவுத் தயாரிப்புகள் யாவும் தேங்காயை முக்கிய ஆதாரமாகக் கொண்டவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத் தமிழர்களது பல பெயர்கள் கேரளத்தவர்களது பெயர்களாகவும் உள்ளன. இப் பெயர்கள் இந்தியத் தமிழ் நாட்டில் பொதுவாகக் காணப்படுவதில்லை.

உதாரணங்கள்: காளிக்குட்டி, சீனிக்குட்டி, கிருஷ்ணக்குட்டி, வேதக்குட்டி, சின்னக்குட்டி, பெரியகுட்டி, அப்பாக்குட்டி, அப்புக்குட்டி, செல்லக்குட்டி ஐயாக்குட்டி, அரியகுட்டி, குட்டிஅம்மா, குட்டிமணி, குட்டிப்பிள்ளை, குஞ்சுப்பிள்ளை, பெரியபிள்ளை, குஞ்சம்மா, குஞ்சய்யா, குஞ்சுமோள், குஞ்சு, அம்மாக்குட்டி.

ஆயுர் வேத வைத்தியமும் மலையாள வைத்தியமும் சிகிச்சை முறைகள், மருந்துகள் ஆகியவற்றில் ஒரே தன்மையானவை. எனவே சிங்கள வைத்தியம் கஜபாகு மன்னர் காலத்தில் அல்லது அதன் பின்னர் இலங்கையுட் புகுத்தப்பட்ட மலையாள ஆயுர்வேத வைத்தியம் ஆகும். சிங்கள மக்களின் பூர்விக்கத்தின் பெரும் பங்கு ஈழத் தமிழர்களையும் சார்ந்துள்ளதால் இவ் வைத்திய முறை ஈழத் தமிழர் மூலமாகவும் சிங்களவர்களையச் சென்றடைந்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 6

# இலங்கையும் சிங்கள மக்களும்

**சிங்கள மக்கள் வடஇந்தியாவில் இருந்து வந்த ஆரியவம்சத்தினரா? சிங்கள மக்களின் உடற்தோற்றத்தைக் கொண்டு (உயரம், நிறம் போன்றவை) மதிப்பிடும்போது மேற்படி கேள்விக்கான விடை பெரும்பாலும் சாதகமாக அமையாது என்ற நிலையே உள்ளது. இற்றைக்கு 75 ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் திரு.ந.சி.கந்தையாபிள்ளை என்பவாரால் வெளியிடப்பட்ட "பொது அறிவு வினாவிடை" எனும் நூலில் மேலுள்ள வினாவுக்கான விடை கீழுள்ளவாறுள்ளது.**

**"சிங்களவர்கள் ஆரியர்கள் அல்லர். சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் என்றும் தொடர்ந்து நிலவிய பகைமை நிலை சிங்களவர்களைத் தமிழர்களிலிருந்து வேறுபட்ட ஒரு இனமாகக் கருதத் தூண்டியது. தாங்கள் தமிழர்களிலும் மேலானவர்கள் என்பதைக் குறிக்கும் வகையில் சிங்களவர்கள் தங்களை ஆரியர்கள் (ஆரியர் = மேலோர்/உயர்ந்தோர்) எனவும் ஆரியவம்சத்தினர் எனவும் கூறிக்கொண்டனர்".**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களவர்கள் தங்களுக்குத் தாங்களே "ஆரியர்" எனும் முத்திரையைக் கொள்வதற்கு வேறொரு முக்கிய காரணமும் உண்டு. அது இலங்கையில் சிங்களவர்களது நிகழ்வுகள், செயற்பாடுகள் ஆகியவற்றிற்கு வட இந்திய மக்களின் அனுதாபம், ஆதரவு, உதவி ஆகியவற்றைப் பெறுதல் ஆகும்.

சிங்களச் சரித்திர ஆசிரியர்களின் கூற்றுப்படி, சிங்கள மக்களின் வரலாறு விஜயனும் அவனது 700 தோழர்களும் இலங்கை வருகையுடன் தொடங்குகின்றது. பெற்றோராலும் சமுதாயத்தாலும் எவ்வகையிலும் கட்டுப்படுத்தப்பட முடியாத இந்த 701-வரும் சமுதாய நலன் கருதி அவர்களது பெற்றோரால் இந்தியாவின் கலிங்க நாட்டிலிருந்து (தற்போதைய ஒரிஸ்ஸா) நாடுகடத்தப்பட்டு இவர்கள் இலங்கையின் புத்தளத்துக்குச் சமீபமான தம்பபண்ணி (தாமிரபரணி) என்னுமிடத்தில் கரை இறங்கினர். விஜயன் குவேனி என்பவளைச் சந்தித்து அவள் மூலம் சிங்கபாகு என்ற மகனையும் சிங்கவல்லி எனும் மகளையும் பெற்றெடுத்தான். சிங்கபாகு பின்னர் சிங்கவல்லியை மணந்தான். இந்த விவாஹத்தின் விளைவாகப் பிறந்த மக்களும் அவர்களுடைய சந்ததியினரும் ஸிம்ஹலே (ஸிம்ஹ - சிங்கம், லே - இரத்தம்) என அழைக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயனும் அவனது தோழர்களும் பின்னர் 701 தமிழ்ப் பெண்களை இந்தியாவின் பாண்டியத் தமிழ் நாட்டிலிருந்து வரவழைத்து மணந்துகொண்டனர். இவ்விவாஹங்களின் வழிவந்த சந்ததியினரும் சிங்கள மக்கள் தொகைப் பெருக்கத்தில் மிகவும் உதவினர்.

மேலுள்ள விஜயனுடையவும் அவனது தோழர்களதும் சரித்திரம் சம்பந்தமாகப் பல முக்கிய கேள்விகள் எமது மனதில் தோன்றி ஏற்ற விளக்கங்களை வேண்டி நிற்கின்றன. இதே கருத்தைத்தான் பேராசிரியர் சிற்றம்பலமும் கொண்டிருக்கிறார் (Sittampalam,S.K., 2003) விஜயனும் அவனது 700 தோழர்களும் ஒரிஸ்ஸாவை(கலிங்கத்தை) சேர்ந்தவர்களெனில் அவர்களின் வழிவந்த சிங்கள மக்களின் பேச்சு மொழி ஒரிய மொழியாகவோ அல்லது அதன் வழி வந்த வேறொரு மொழியாகவோ ஏன் இல்லை?

சிங்கள எழுத்து உருவங்களின் வளைவு, சுழிவான அமைப்பு ஒரிய எழுத்துக்களின் அமைப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்டுத் தென்னிந்திய மொழிகளின் எழுத்துக்களின் சாயலைக் கொண்டிருப்பதற்கான காரணம் யாது?

ஆரியர்கள், திராவிடர்கள், வேறு பல இனத்தவர்கள் யாவரும் எத்தனையோ நூற்றாண்டுகளாக இந்தியாவின் பல பாகங்களிலும் கலந்து வாழ்கின்றனர். எனவே விஜயனும் அவனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களும் ஆரியர்களல்லாத வேற்றினக் குழுக்களில் இருந்து வந்திருக்கக் கூடுமா?

சிங்களம் அன்னளவாக 40% தமிழ்ச் சொற்களையும் 60% பாளிச் சொற்களையும் சிறிதளவு ஆங்கில, போர்த்துக்கேய சொற்களையும் கொண்டுள்ள மொழியாகும். இந்து சமயத்தின் சமஸ்கிருதச் செல்வாக்கால் மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகள் தமிழிலிருந்து தோன்றியது போல் பௌத்த மதத்தின் பாளி மொழிச் செல்வாக்கால் தமிழில் இருந்து சிங்கள மொழி தோன்றியிருக்கலாமா?

இந்தியத் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் உள்ள மக்களுக்கிடையில் பண்டு தொட்டு இன்றுவரை திருமணத் தொடர்புகள் நடைபெற்று வருகின்றன. தற்போதிலும் பார்க்க முற்காலங்களில் இவ்விவாஹங்கள் மிக அதிகமாகவே இருந்தன. சிங்கள மக்களிடையே தமிழ் இனக் கலப்புப் பெருக இத்திருமண உறவுகள் வகை செய்தன.

அனேகமாக எல்லாச் சிங்கள மன்னர்களது சேனைகளிலும் வேளக்காரர்கள் எனும் தமிழ் நாட்டைச் சேர்ந்த படையினர் பெருமளவில் இருந்தனர். காலப்போக்கில் இவர்கள் சிங்கள மக்களுடன் இரண்டற இணைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3-ம் பராக்கிரமபாகு மன்னன் 24,000 தமிழ் மக்களைத் தமிழ் நாட்டிலிருந்து யுத்தக் கைதிகளாகக் கொண்டு வந்து இலங்கையின் கண்டி மாவட்டத்தில் குடியேற்றினான். அவர்கள் பின்னர் சிங்களவர்களாக மாறினர்.

பல கைவினைஞர்கள், சிற்பிகள், கட்டிடத் தொழில் விற்பன்னர்கள் போன்றோர் விஹாரைகள், கோவில்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்றவற்றில் வேலை செய்வதற்காக இலங்கையின் சிங்களப் பிரதேசங்களுக்குத் தமிழ் நாட்டிலிருந்து வந்தனர். இவர்கள் பின்னர் சிங்கள இனத்துடன் சங்கமமாயினர்.

சிங்களவர்களின் பெயர்களின் முன் அல்லது பின் காணப்படும் "Ge" எனும் இணைப்பு அவர்களது மேற்படி வம்சாவளியைக் குறிக்கும் பெயர்கள் ஆகும்.

உதாரணங்கள்: Bamunuge (பிராமணனுடைய), Hettige (செட்டியுடைய), Vaduge (தச்சனுடைய), Vellalage (வெள்ளாளனுடைய).

இவை தவிர வரிப்புலிge, வீரப்புலிge, சிங்கப்புலிge, இளந்தாரிge, கங்காணமge, கோனாரகேge, வனப்புலிge போன்ற பெயர்களும் தமிழ்ப் பூர்விகத்தைச் சுட்டுவன.

Kuruppu (குறுப்பு) எனும் இணைப்பு சில சிங்கள மக்களின் பெயர்களில் பின் இணைப்பாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகிறது. இது அவர்களது கேரளத் தொடர்பைக் குறிக்கிறது.

தமிழ் நாட்டிலும் கேரளத்திலும் இருந்து பெருந்தொகையான மீனவர்கள் இலங்கையின் மேற்கு, தெற்கு கரையோரப் பகுதிகளில் காலங்காலமாகக் குடியேறினர் (இலங்கை, இந்திய அரசுகளின் சட்ட திட்டங்கள் காரணமாக இக் குடியேற்றங்கள் மிகக் குறைந்துள்ளன). இவர்கள் காலப்போக்கில் சிங்களவர்களாக மாறினர். இம் மாற்றங்கள் இன்றும் தொடர்ந்து நடைபெறுவதை வத்தளை, கொழும்பு, நீர்கொழும்பு, சிலாபம் போன்ற கரையோர நகரங்களிற் காணலாம். இவ்வகைச் சிங்களவர்கள் கரைநாட்டுச் சிங்களவர்கள் (Karawa) எனவும் மலைநாட்டில் வசிப்பவர்கள் மலைநாட்டுச் சிங்களவர்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர்.

இற்றைக்கு 500 ஆண்டுகளுக்கு முன் தேவேந்திர முனையிலிருந்த மிகப் பழைமை வாய்ந்த ஆயிரம் கால் மண்டபத்தைக் கொண்ட பாரிய விஷ்ணு கோவில் போர்த்துக்கேயரால் இடித்தழிக்கப்பட்டது. திஸ்ஸமஹாராமைக்குச் சமீபமாக இருந்த இக்கோவில் தென்னிலங்கை மக்களின் மிக முக்கிய வழிபாட்டுத் தலமாக இருந்தது (Arumugam,S.,1999). பொன்னம்பெருமா(ள்), அழகியபெருமா(ள்), தேவாரப்பெருமா(ள்),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளேபெருமா(ள்) (இளையபெருமாள் என்ற பெயரின் திரிபு), அழகப்பெருமா(ள்) வீரப்பெருமா(ள்), மதுரப் பெருமா(ள்), சண்பகப்பெருமா(ள்), நீலப்பெருமா(ள்), மன்ன(ன்) பெருமா(ள்). அழகியவண்ண(ன்) இவ்வகைக் குடும்பப் பெயர்கள் (surnames) தென்மாகாணத்தில் பரவலாகக் காணப்படும் சிங்கள மக்களின் பெயர்களாகும். இவை தேவேந்திரமுனை (தெவிநுவரை)யிலிருந்த பெரிய புராதன விஷ்ணு கோவிலுடன் தொடர்புடைய தமிழர்கள் சிங்களவர்களாக மாறியதையே நிரூபிக்கின்றன. கஷ்டங்கள் நேரும்போது விஷ்ணு ஸஹஸ்ரநாமம் ஓதும் வழக்கம் இக்குடும்பங்கள் பலவற்றில் இன்றும் நிகழ்கிறது.

ஸ்ரீ விக்ரம ராஜசிங்க எனப் பெயரை மாற்றிக் கொண்ட கண்ணுச்சாமி நாயக்கர் கண்டி அரசின் கடைசி மன்னனாவான். இவன் தமிழ் நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்தவன். கண்டியிலுள்ள கௌதம புத்தரின் புனித தந்தம் கொண்டுள்ள தலதா மாளிகையை மிகப் பிரமாண்டமாகப் புதுப்பித்துக் கட்டியவன். இவனை ஆங்கிலேயர்கள் கைது செய்து வேலூர் (தமிழ் நாடு) சிறையில் அடைத்தனர். அங்கு அவன் காலமானான். அவனது சமாதி இன்றும் வேலூரில் உள்ளது. மலைநாட்டு(கண்டி)ச் சிங்கள மக்களின் பெரும்பாலோரது குடும்பப் பெயர்கள் (surnames)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOH. JPL

"நாயக்க" (Nayaka) என முடிவதைக் காண்கிறோம். உதாரணங்கள்: சேனநாயக்க, வன்னிநாயக்க, திஸாநாயக்க, ரத்நாயக்க, விக்ரமநாயக்க, விஜேநாயக்க, ராமநாயக்க. "நாயக்க" என்ற முடிவுகளைக் கொண்ட குடும்பப் பெயர்கள் (surnames) ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கவின் நாயக்கர் வம்ஸ ஆட்சிக்கு முன்னர் இருந்ததாகத் தெரியவில்லை. எனவே நாயக்கர் வம்ஸத்தவருடன் இச்சிங்கள மக்களின் பூர்வீகத்தைத் தொடர்புபடுத்தல் சரியானது போல் தோன்றுகிறது.

வேறெங்கும் வழக்கில் இல்லாத பல சங்க காலத் தமிழ்ச் சொற்கள் சிங்களத்தில் இன்றும் வழக்கில் உள்ளன. சில உதாரணங்கள் பின்வருமாறு:
வரக்கா (பழைய தமிழில் வருக்கை = பலாக்காய்), அடவிய (பழைய தமிழில் அடவி = காடு), பொல (சந்தை), யெல் (வயல்), வரக்காபொல (ஓர் ஊரின் பெயர்; வரக்கா-பலாக்காய்/பலாப்பழம்; பொல - புலம் (இங்கு சந்தை)), வெவ (wewa - வாவி), மல (மலர்), மல் (மலர்கள்), பிட்டு, ஆப்ப (பிட்டு, அப்பம் - பழங்காலத் தமிழர் உணவுகள்), பெட்டிய (பெட்டி), முட்டிய (முட்டி), சட்டிய (சட்டி).

மேல் மாகாணத்தில் காணப்படும் தமிழ் ஊர்ப்பெயர்கள் சில நஞ்சுண்டான்கரை வாய்க்கால், நல்லூர் (நல்லூருவ) பாணன்துறை. சிங்கள இன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கத்தில் தமிழர்களின் பங்களிப்பை இவை குறிப்பதாக இருக்கலாம்.

இலங்கையின் தற்போதைய தமிழ் மாகாணங்களுக்கு வெளியே, குறிப்பாக வடமத்திய, வடமேல் மாகாணங்களில், பண்டுதொட்டு இன்றுவரை தமிழ்ப் பெயர்களையே கொண்டுள்ள கிராமங்கள் பலவுண்டு. பண்டைய காலங்களில் தமிழர்களாக இருந்த இக்கிராமங்களின் மக்கள், காலவோட்டத்தில் சிங்களவர்களாக மாறியதையே இக்கிராமங்கள் உறுதிபடத் தெரிவிக்கின்றன.

இந்து மதத்தினராக, இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன், இலங்கைத் தலைநகர் கொழும்பில் ஆடிவேல் விழாவைத் தொடக்கி வைத்த தமிழ்க் கொழும்புச் செட்டிகள் (இவர்கள் செட்டியார்களல்லர்) தற்போது சிங்கள சமூகத்தின் ஒரு பகுதியாக மாறியது மட்டுமன்றி கத்தோலிக்க மதத்தவராக ஆகியுள்ளனர். எனினும் அவர்களின் குடும்பப் பெயர்கள் (surnames) இன்னும் இந்துத் தமிழ்ப் பெயர்களாகவே உள்ளன. உதாரணங்கள்: காசிச்செட்டி, பெருமாள் செட்டி. தமிழர்கள் சிங்களவர்களாகிய மிகச் சமீபத்திய உதாரணம் இதுவாகும்.

இந்துக்களின் பழம்பெரும் புராணங்களுள் ஒன்றான கந்தபுராணம் கந்தக்கடவுளின் (முருகனின்) சரித்திரம் பற்றியது. முருகன் தனது அண்ணன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேசப்பெருமானின் உதவியுடன் தென்இலங்கையின் கதிர்காமத்திலுள்ள (கதிர்-கிராமம்) வள்ளிமலைக் காட்டைச் சேர்ந்த வேடுவப் பெண்ணான வள்ளியின் மனதை வென்று அவளை மனம் புரிந்தார். கதிர்காம முருகன் ஆலயத்தில் பூசை செய்யும் கப்புராளைகள் (பூஜாரிகள்/குருமார்) இன்றுவரை வள்ளியின் வேடர் குலத்தைச் சேர்ந்த வள்ளியின் பரம்பரையினரே. தென்னிலங்கையில் விந்தனை (Bintenne), மஹியங்கனை, கதிர்காமம் ஆகிய இடங்களில் வாழும் இவர்கள் சிங்களம் கலந்த வேடுவமொழி பேசுகின்றனர். இதேபோல கிழக்கிலங்கையில் வெருகலிலும், பனிச்சங்கேணியிலும் வாழும் வேடர்கள் தமிழ் கலந்த வேடுவமொழி பேசுகின்றனர்.

சிங்கள மக்களில் மிகப் பெரும்பான்மையினர் கதிர்காமத் தெய்வத்தின் (கதரகம தெவியோ) தீவிர பக்தர்கள். வேடர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான திருமணபந்தங்கள் நடைபெற்று வருகின்றன. தென் இலங்கையில் வேடர் சமுதாயம் மெதுவாக சிங்கள சமுதாயத்தினுள் உள்வாங்கப்படுகிறது.

பாரம்பரியப் பழக்க வழக்கங்கள், புது வருஷங்கள் (அவற்றின் பெயர்களும் கூட) சிங்களவர்கள், ஈழத் தமிழர்கள் ஆகிய இரு சமூகங்களுக்கும் பொதுவாகவே உள்ளன. இவற்றில் பௌத்த மத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தம் இல்லை. சிங்களவர்களுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் பொதுவான முன்னோர்கள் தொடர்பையே இது குறிக்கிறது.

ஆதி சங்கராச்சாரிய சுவாமிகளின் அயராத பிரசாரங்களாலும் முயற்சியாலும் பௌத்த சமயத்துக்கு மதமாற்றம் பெற்றவர்களில் பெரும்பான்மையோர் மீண்டும் இந்து சமயிகளாயினர். சைவ நாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள் ஆகியோரது உறுதியான பங்களிப்பும் இவ்விஷயத்தில் முக்கியமானது. ஆந்திர மாநிலத்தில் பௌத்த மதத்திலிருந்து இந்து மதத்துக்கு மாற்றத்தை விரும்பாத பலர் அப்போது இலங்கை நோக்கி இடம் பெயர்ந்ததாகக் கூறப்படுகிறது. இவர்கள் சிங்கள மக்களுடன் சங்கமமாகி இருக்கலாம். இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன் இலங்கையின் அம்பாறை மாவட்டத்தில், புராதன தெலுங்கு பேசும் பல குடும்பங்கள் நீத்தை, சங்கமான்கந்தை போன்ற சில கிராமங்களில் வசித்து வந்தன. இக்கிராமத்தவர்கள் விஷப்பாம்புகளைப் பிடித்தல், அவற்றைப் பழக்கி ஆட்டுவித்தல் போன்ற தொழில்களை ஜீவனோபாயமாகக் கொண்டிருந்தனர்.

பல சந்தர்ப்பங்களில் இலங்கையின் தற்போதைய தமிழ் மாகாணங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள புராதன தமிழ்க்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்கள் தங்களைச் சிங்களக் கிராமங்களாகப் பிரகடனப்படுத்தும்படி இலங்கை அரசுகளால் நிர்ப்பந்திக்கப்பட்டன. தமிழ்க் கிராமங்களுக்குச் சமீபமாக அல்லது அவற்றைச் சூழவர ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களின் சூழற் தாக்கங்கள், இலங்கை அரசுகளின் தூண்டல்கள், ஊக்குவிப்புகள் ஆகியவை காரணமாக மேற்படி தமிழ்க் கிராமங்கள் சிங்களக் கிராமங்களாக மாற்றப்பட்டன.

மேலுள்ள ஆதாரங்கள் (மேலும் பல ஆதாரங்கள் இருக்கக் கூடும்) சிங்கள மக்களின் ஆரிய பூர்விகத்தை மிகுந்த சந்தேகத்துக்கு உள்ளாக்குகின்றன என்பதுடன் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான மிகக் கூடிய மரபு வழி, மரபணுத் தொடர்புகளையும் உறுதி செய்கின்றன (Sittampalam,S.K.,2003).

மிகப் பிரபலமான சிங்கள அரசியல்வாதிகள் பலரின் பூர்வீகங்கள் தமிழர் கலப்புள்ளதாகவே இருக்கின்றன. உதாரணங்கள்:

I. ஜே.ஆர்.ஜெயவர்த்தனா (முன்னாள் இலங்கை ஜனாதிபதி) தமிழ் நாட்டிலிருந்து வந்த கிறிஸ்தவ மதப்போதகர் தம்பி முதலியாரின் வழித்தோன்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II. SWRD பண்டாரநாயக்க (முன்னால் இலங்கைப் பிரதமர்) தேவேந்திரமுனை விஷ்ணு கோவில் பூசகராக இருந்த நீலப்பெருமாளின் வழித்தோன்றல்.

III. சிரிமாவோ பண்டாரநாயக்க, சந்திரிகா பண்டாரநாயக்க - (இலங்கைப் பிரதமர்கள், ஜனாதிபதி).

இலங்கையின் பௌத்த விஹாரைகளின் கட்டட அமைப்பும் கேரள மாநிலத்திலுள்ள இந்துக் கோவில்களின் கட்டட அமைப்பும் ஒரே மாதிரியானவை. இலங்கை பௌத்த விஹாரையுட் செல்லும் ஒருவர், தான் கேரளாவின் இந்துக்கோவிலுள் இருப்பது போன்ற உணர்வையே பெறுகிறார்.

சிங்கள கலாச்சாரத்தின் பெருமையெனப் போற்றப்படும் கண்டிய நடனம், கஜபாகு மன்னர் ஆட்சியில் (கி.பி. 12-ம் நூற்றாண்டில்) கேரள நாட்டிலிருந்து இலங்கையுட் புகுத்தப்பட்டது அதே போல பூத நாட்டியம் (Devil Dance), முகமூடி நடனம் (Mask Dance), தோவில், தெய்யம் நடனம், பத்தினி (கண்ணகி) வழிபாடு போன்றவையும் கேரளாவில் இருந்தே பெறப்பட்டன. கஜபாகு மன்னரின் குலதெய்வ ஸ்தலம் தஞ்சாவூருக்கு அண்மையிலுள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெய்த்தானம் என அங்குள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. அவர் இராமேஸ்வரம் கோவிலின் மூலவர், பர்வதவர்த்தனி ஆகிய தெய்வங்களின் குரு அறைகளையும், உத்தரகோசமங்கையில் திருவுத்தரகோசமங்கைக் கோவிலையும் புனருத்தாரணம் செய்து கட்டினார். கிழக்கு மாகாணத் தமிழ் மக்களிடையேயும், வன்னிப் பிரதேசத் தமிழ் மக்களிடையேயும், வடமேல் மாகாண மக்களிடையேயும் பத்தினி (கண்ணகி) வழிபாடு காணப்படுகிறது.

எல்லாப் பௌத்த பிக்கு பயிற்சிப் பாடசாலைகளிலும், பிரிவினைக்களிலும் சமீப காலம்வரை தமிழ் ஓர் பயிற்சி மொழியாக இருந்தது. புத்தகோசர், புத்ததத்தர், ஜோதிபாலர், தர்மபாலர், சங்கமித்திரர் ஆகியோர் பல நூற்றாண்டுகள் முன் வாழ்ந்த தமிழ்ப் பௌத்த பிக்குகளிற் சிலராவர்.

அநேக பௌத்த விஹாரைகளில் கதிர்காம முருகன், விஷ்ணு, விநாயகர் ஆகிய இந்துக் கடவுளருக்கும் சிலைகள் காணப்படுவதுடன் வழிபாடுகளும் நடைபெறுகின்றன. இலங்கை பௌத்தர்களின் பெருவிழாவான கண்டிப் பெரஹர ஊர்வலத்தில் புத்தரின் புனித தந்தத்துடன் விநாயகர், விஷ்ணு, முருகன், சிவன், பத்தினி ஆகிய இந்து தெய்வங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குபெறுவது எத்தனையோ நூற்றாண்டுகளாக நடைபெறும் ஓர் நிகழ்வாகும்.

சிங்களப் பெண்களால் அணியப்படும் ஆரிய சிங்கள உடை எனும் உடை, கேரள நாட்டின் கடல்சார் கரையோரப் பெண்களாலும் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் வாழும் கத்தோலிக்கப் பெண்களாலும் உடுத்தப்படுகின்றது. இந்த உடைக்கும் ஆரியர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

இவை எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கும்போது, ஈழத் தமிழரின் சரித்திரம் 50 நூற்றாண்டுகளுக்கும் மேலானது. சிங்கள மக்களின் சரித்திரம் கௌதம புத்தரின் வருகையின் பின்னர், பல வருடங்களின் பின்பு ஆரம்பமானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 7
# கிரந்த லிபியும் சிங்களமும்

இற்றைக்குச் சில ஆயிரம் வருடங்களுக்கு முன் பிராமணர்கள் தமிழர் சமுதாயத்துடன் ஒன்றிணைந்த போது சமஸ்கிருததத்தின் தேவநாகரி லிபிகளுக்கு (எழுத்துகளுக்கு) ஒப்ப, கிரந்த லிபிகள், சமஸ்கிருதத்தை எழுத, இவர்களின் சுலபத்திற்காக உருவுமைக்கப்பட்டதாகக் கூறுவர். இக் கிரந்த எழுத்துக்களின் உருவ அமைப்பு தேவநாகரி எழுத்துக்களின் உருவ அமைப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்டு தமிழ் எழுத்துக்களின் சாயலையே பெருமளவு கொண்டுள்ளது. வட இந்திய மொழிகளை எழுதுவற்கு தேவநாகரி எழுத்துக்களே சில மாற்றங்களுடன் உபயோகமாகின்றன.

தமிழிலிருந்து சமஸ்கிருதத்தின் மிகுந்த செல்வாக்கின் காரணமாக மலையாளம் தோன்றியது. இந்து சமயத்தின் சமஸ்கிருதச் செல்வாக்கு இதற்கு முக்கிய காரணமாகும். மலையாள மொழியை எழுத கிரந்த எழுத்துகளே உபயோகிக்கப்படுகின்றன.

பௌத்த மத செல்வாக்கின் காரணமாக பாளி மொழியின் அபரிமிதச் செல்வாக்கு தமிழில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் காரணமாகப் பாளிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கள் தமிழால் உள்வாங்கப்பட்டன. இவ்வாறு பெருமளவு பாளிச் சொற்களை உள்வாங்கிய தமிழ் மொழியே சிங்களமாக உருப்பெற்றது எனக் கருதல் நியாயமானது. இன்று வழக்கில் இல்லாத பல பழைய தமிழ்ச் சொற்கள் சிங்களத்தில் வழக்கில் உள்ளன. இவ் வடிப்படையில் சிங்களம் ஓர் ஆரிய (பாளி) மொழிக்கலப்பு மிகுந்த திராவிட மொழியாகும். சிங்களம் இந்து-ஐரோப்பிய அல்லது இந்து-ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது எனும் மிகுந்த பிரசாரப்படுத்தப்பட்ட மாயை அகற்றப்படல் மிக அவசியமானது.

சிங்களமும், மலையாளத்தைப் போல், சிறிது மாற்றங்களுடன் கூடிய கிரந்த எழுத்துக்களையே அதனை எழுதும் எழுத்துக்களாக உபயோகிக்கின்றது. சிங்கள மொழியின் தோற்றம் கௌதம புத்தர் இலங்கை வருகையின் பல நூற்றாண்டுகளின் பின் நடைபெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை 1:** **தமிழ், கிரந்தம், மலையாளம், சிங்களம் ஆகிய மொழிகளின் எழுத்துக்களிடையே காணப்படும் உருவ ஒற்றுமைகள்**

| தமிழ் | கிரந்தம் | மலையாளம் | சிங்களம் |
|---|---|---|---|
| அ | 𑌅 | അ | අ |
| ஆ | 𑌆 | ആ | ආ |
| இ | 𑌇 | ഇ | ඉ |
| ஈ | 𑌈 | ഈ | ඊ |
| உ | 𑌉 | ഉ | උ |
| ஊ | 𑌊 | ഊ | ඌ |
| எ | 𑌏 | എ | එ |
| ஏ | | ഏ | ඒ |
| ஐ | 𑌐 | ഐ | ඓ |
| ஒ | 𑌓 | ഒ | ඔ |
| ஓ | | ഓ | ඕ |
| ஔ | 𑌔 | ഔ | ඖ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தமிழ் | கிரந்தம் | மலையாளம் | சிங்களம் |
|---|---|---|---|
| க | 𑌕 | ക | ක |
| ச | 𑌚 | ച | ච |
| ட | 𑌟 | ട | ට |
| த | 𑌤 | ത | ත |
| ப | 𑌪 | പ | ප |
| ற | | റ | |
| ர | 𑌰 | ര | ර |
| ய | 𑌯 | യ | ය |
| ல | 𑌲 | ല | ල |
| ள | 𑌳 | ള | ළ |
| ழ | | ഴ | |
| ன/ந | 𑌨 | ന | න |
| ங | 𑌙 | ങ | ඞ |
| ஞ | 𑌞 | ഞ | ඤ |
| ண | 𑌣 | ണ | ණ |
| ம | 𑌮 | മ | ම |
| ஸ்ரீ | | | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 2: துணைகள்

| | | | |
|---|---|---|---|
| —ா | —ா | —ி | — |
| —ி | —ி | —ி | —ி |
| —ீ | —ீ | — | —ீ |
| — | ு | | |
| —ூ | $ | — | |
| ெ— | | ெ— | ெ— |
| ே— | ெ— | ே— | ெ— |
| ை | ை— | ை— | ை— |
| ெ—ா | | ெ— | ெ—⊃ |
| ே—ா | ெ—ா | ே— | ே—⊃ |
| ெ—ள | ெ—ள | — | — |

**மேலுள்ள எழுத்துருவங்கள் பலவும் கிரந்த லிபியினூடாகத் தமிழ், மலையாளம், சிங்களம், ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பை வலியுறுத்தி நிற்கின்றன.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 8

## ஈழத் தமிழரின் தற்போதைய நிலமை

இலங்கை சுதந்தரமடைந்த 1948-ம் ஆண்டின் பின் அரசாங்கத்தின் திட்டமிடப்பட்ட பாரிய சிங்களக் குடியேற்றங்களினால் தமிழ்ப் பிரதேசங்கள் பூரண சிங்கள மயமாக்கப்பட்டது. இலங்கை சுதந்தரமடைந்த பின் தமிழர் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை இலங்கை அரசு முனைப்புடன் மேற்கொண்டது;

தமிழ் மாகாணங்களில் காடுகளை அழித்து அங்கு சிங்களவர்களைக் குடியேற்றியது (உதாரணம்: கல்ஓயாத்திட்டம் (Gal Oya - முன்னர் பட்டிப்பளை ஆறு)).

தொடர் நிலப்பரப்பாக இருக்கும் தமிழ் மாகாணங்களின் பொது எல்லைகளில், அவற்றைத் தனித்தனியாகப் பிரிப்பதற்காக, பெருமளவு சிங்களக் குடியேற்றங்களை பொது எல்லைகள் முழுவதிலும் ஏற்படுத்தியது.

உதாரணங்கள்: வடக்கு மாகாணத்தைக் கிழக்கு மாகாணத்திலிருந்து தனிமைப்படுத்த அம்மாகாணங்களின் பொது எல்லையில் கொக்கிளாய்-நாயாறு பிரதேசத்தில் ஜனகபுர சிங்களக் குடியேற்றம்; மணல் ஆற்றில் வெலி ஓயா சிங்களக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்றம்; வடக்கு மாகாணத்தை வடமேல் மாகாணத்திலிருந்து தனிமைப்படுத்த அம் மாகாணங்களின் பொது எல்லை முழுவதும் உள்ள வண்ணாத்திவில்லு, பொன்பரப்பிப்பற்று ஆகிய பிரதேசங்களில் முற்றிலுமான சிங்களக் குடியேற்றம்

அரசின் உதவியுடன் தமிழ் மக்களை தமிழ்க் கிராமங்களிலிருந்து சிங்களக் காடையர்களுடைய மிரட்டல்களால் வெளியேற்றிவிட்டு அக்காடையர்களையும், அவர்களது குடும்பங்களையும் வேறு சிங்களக் குடும்பங்களையும் அக்கிராமங்களில் குடியேற்றி அக்குடும்பங்களுக்கு இராணுவப் பாதுகாப்பு ஆயுதங்கள் (துப்பாக்கி, வாள் போன்றவை) ஆகியவற்றை வழங்கியது.
உதாரணங்கள்: மணலாறு, கொக்கிளாய், நாயாறு இன்னோரன்ன பல கிராமங்கள்

பௌத்த புனிதப் பிரதேசங்கள் என்ற அரச பிரகடனங்களால் பாரம்பரிய தமிழ்க் குடியிருப்புகளிலிருந்து தமிழர்களை அகற்றி அங்கு பௌத்த சிங்களவர்களைக் குடியேற்றியது.
உதாரணம்: அனுராதபுரம்.

சிங்களக் குடியேற்றங்களால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது கிழக்கு மாகாணமே ஆகும் (அண்ணளவாகக் கிழக்கு மாகாணத்தின் 33%). புத்தளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்திலும் 30% வரை சிங்களக் குடியேற்றங்களால் விழுங்கப்பட்டுவிட்டது.

தமிழ்பிரதேசங்களுள் உருவாகப்பட்டுள்ள புதிய சிங்களக் கிராமங்களும் அவற்றிற்கு கொடுக்கப்பட்டுள்ள சிங்களப் பெயர்களும் கீழே கூறப்பட்டுள்ளன.

சில உதாரணங்கள்: அக்போபுர, மஹிந்தபுர, ஸிரிமாபுர, கெமுனுபுர, சோமபுர, ஜனகபுர, Gampaha Handiya. Gampaha Handiya (கம்பஹ சந்தி). பொன்பரப்பிப்பற்றில் உள்ளது.

நூற்றுவீதத்தின் அடிப்படையில், இலங்கை சுதந்திரமடைந்தபோது, இலங்கையே உலகில் தமிழர் அதிகம் வாழும் நாடாக இருந்தது. பிராஜாவுரிமைச் சட்டத்தினால் 10 லக்ஷத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் இலங்கையில் இருந்த அகற்றப்பட்டனர். 6 லக்ஷத்துக்கு அதிகமானோர் அநீதியான அரசியற் சட்டங்களாலும், யுத்த பீதியாலும் இலங்கையை விட்டு நீங்கி வேறு நாடுகளில் நிரந்தரமாகவோ அல்லது அகதிகளாகவோ வாழ்கின்றனர். 3 லக்ஷம் பேர்வரை யுத்த விளைவுகளால் கொல்லப்பட்டும் காணாமற் போயும் உள்ளனர். இவை காரணமாகத் தமிழரின் நூற்றுவீதம் மிகவும் குறைந்துள்ளது. எனினும் இப்போதும் இலங்கையே உலகில் தமிழர் நூற்றுவீதத்தில் முன்னிலையில் உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை 3:சிங்கள மயமாக்கப்பட்டதற்கான உதாரணங்களும் அவற்றின் தற்போதைய/ முன்னைய தமிழ்ப் பெயர்களும்.**

| | சிங்கள மயமாக்கப்பட்ட பெயர் (த.பெ) | முன்னைய பெயர் (மு.பெ) |
|---|---|---|
| 1 | தெதுறு ஓயா (Deduru Oya) | மாயவன் ஆறு (மு.பெ) |
| 2 | மல்வத்து ஓயா(த.பெ) | அருவி ஆறு (மு.பெ) |
| 3 | வெலி ஓயா (த.பெ) | மணல் ஆறு (மு.பெ) |
| 4 | கல் ஓயா Gal Oya (த.பெ) | பட்டிப்பளை ஆறு (மு.பெ) |
| 5 | கலா ஓயா (த.பெ). | பொன்பரப்பி ஆறு (மு.பெ) |
| 6 | பதவிய (த.பெ) | பதவிக்குளம் (மு.பெ) |
| 7 | மொரவேவ (த.பெ) | முதலிக் குளம் (மு.பெ) |
| 8 | இக்கிரிகொல்லேவ (த.பெ) | பேயாடிகூளாங் குளம் (மு.பெ) |
| 9 | ஹலாவத்த (த.பெ) | சிலாபம் (மு.பெ) |
| 10 | தெவுந்தர,தெவிநுவர (த.பெ) | தேவேந்திர நகர் (மு.பெ) |
| 11 | புலாங்குளம (த.பெ) | விளாங்குளம் (மு.பெ) |
| 12 | மொன்னகுளம (த.பெ) | மணல்க்குளம் (மு.பெ) |

245673



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியரிடமிருந்து இலங்கை 1948-ல் சுந்தந்திரமடைந்தபோது பிரித்தானியரின் அனுசரணையுடன் இலங்கை இரண்டு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தால் அல்லது சட்டபூர்வமான சமஷ்டி அரசியல் அமைப்பைப் பெற்றிருந்தால் தமிழ் மக்கள் இத்தனை பேரிழப்புகள், அநியாயங்கள், அவலங்களைச் சந்திக்க நேர்ந்திருக்காது. சிங்களவர்க்ளையோ வேறு எந்த நாட்டையோ நம்பியிராமல் தன்மானத்துடன் சுதந்திரமாக வாழ்ந்திருக்கலாம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள பல சுயநலம் கொண்ட தமிழர்கள் ஈழத் தமிழர்களின் தற்போதைய அவல நிலைக்குப் பெரும் பொறுப்பாளிகள் ஆகின்றனர்.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த குமாரதுங்க முனிதாஸ என்பவர் இந்து மதத்துக்கும் இந்தியாவுக்கும் எதிராகச் சிங்கள மக்களைத் தூண்டும் ஹெல கவுல (Hela Havula) என்னும் இயக்கத்தைத் தொடங்கினார். இத் தீவிரவாதம் தமிழ் மக்களுக்கும் எதிரானது. தற்போது, ஹெல உறுமய இயக்கம், வரலாற்றினையே திரித்து இராவணனே சிங்கள மக்களின் மூதாதையரின் வம்ஸத்தவன் என்ற பொய்யான பிரசாரத்தைச் சிங்கள மக்களிடையே பரப்பி வருகிறது.

இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன் தென்இலங்கையில் வாழ்ந்த பௌத்த பிக்குவான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநகாரிக தர்மபாலதேரர் பௌத்த சிங்கள தீவிரவாதத்தை ஊக்கி வளர்த்தார். தமிழருக்கெதிரான சிங்கள இனவாதம் இவ்வளவு மோசமான நிலையை அடைவதற்கு 1948-ல் இருந்து இன்றுவரை சிங்கள அரசியல்வாதிகளின் வாக்கு வங்கி அரசியலே முக்கிய காரணம்.

19-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கை வந்த பிரித்தானியர் இலங்கை முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்ததுடன் அப்போது இலங்கையில் இருந்த யாழ்ப்பாண அரசு, வன்னி அரசு ஆகிய இரு தமிழர் அரசுகளையும், தமிழ் நாயக்கர் மன்னரால் ஆளப்பட்ட, சிறிதளவு தமிழ்ப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய கண்டியச் சிங்கள அரசையும் ஒன்றிணைத்து, நிர்வாக சுலபத்திற்காக ஒன்பது மாகாணங்களாகப் பிரித்தனர்.

இலங்கை பிரித்தானிய முடியாட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற 1948-க்கு முன்னைய பல புத்தாண்டுகளிலேயே சிங்கள இனவெறியூட்டல் தமிழருக்கெதிராகத் திட்டமிட்ட முறையில் சிங்கள மஹாசபா, பௌத்த பிக்குகள் முன்னணி, சிங்கள பௌத்த கல்விமான்கள் ஆகியோரால் மிகுந்த தீவிரத்துடன் செயற்படுத்தப்பட்டது. 1915-இல் நடந்த சிங்கள - முஸ்லிம் இனக்கலவரங்கள் இதற்கு ஓர் உதாரணமாகும். இலங்கை சுதந்திரமடைந்த போது சிங்கள இனவாதச் சூழ்நிலை இலங்கையில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் இலங்கை இரு நாடுகளாகப் பிரிவதைப் தமிழர்கள் விரும்பாத ஓர் நிலை காணப்பட்டது. இதில் ஒரு பிரிவினர் இலங்கை ஒரு சிறிய நாடாகையால் அதனை மேலும் பிரிக்க வேண்டாமெனவும் தமிழர்கள் சிங்களவர்களுடன் ஒற்றுமையாக வாழமுடியும் எனவும் கருதினர். மற்றொரு சாரார் அவர்களது பெருமளவு சொத்துக்களும் தொழில் வருமானங்களும் சிங்களப் பிரதேசங்களில் இருந்தமை காரணமாகப் பிரிவினையை விரும்பவில்லை.

இந்தியா 1947-இல் சுதந்திரம் அடைந்த போது இந்தியா, பாகிஸ்தான் என இரண்டு தனி நாடுகளாகப் பிரிந்தது போல இலங்கையும் ஈழத் தமிழகம், சிங்கள நாடு என இரு தேசங்களாக அதன் சுதந்திரத்தின் போது (1948-இல்) பிரிந்திருப்பின் வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம், வடமேல் மாகாணம் வவுனியாவிலிருந்து அனுராதபுர நகரப் பிரதேசம்வரை உள்ளடக்கிய நிலப்பரப்பு ஆகிய பிரதேசங்கள் முழுவதுமாகத் தமிழர் வசம் சேர்ந்திருக்கும் அல்லது ஓர் சமஷ்டி அரசியல் அமைப்பின் கிழ் இப்பிரதேசங்கள் தமிழ் ஈழ அரசுப் பிரதேசங்கள் ஆகியிருக்கும். ஈழத் தமிழர்கள் செய்த இமாலயத் தவறு பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றபோது பிரிவினை கோராமையாகும்.

தமிழ், அதனது தொன்மை இயல்புகளையும் தனித்தன்மையையும், இந்தியத் தமிழ் நாட்டில், மற்றைய இந்திய மொழிகளின் (குறிப்பாக ஹிந்தியின்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கத்தாலும் ஆங்கிலச் செல்வாக்காலும், மெதுவாக இழந்து வருகிறது.

தமிழை மூலமாகக் கொண்ட பத்திரிகைகள், சினிமா, தொலைக்காட்சி (T.V), வானொலி, நாவல்கள் ஆகியவை ஆங்கிலம் (அல்லது ஹிந்தி) பெருமளவு கலந்து பேசும் தமிழ் நாகரிகமானது எனும் போலி மனப்பான்மையை மக்களிடையே தோற்றுவித்துள்ளன.

**அட்டவணை 4: தமிழில் வேற்று மொழிச் சொற்கள் உபயோகம்**

| உதாரணங்கள் | சரியான தமிழ்ச் சொற்கள் |
|---|---|
| சன்னா தால் (ஹிந்தி) | கடலைப் பருப்பு |
| தனியா (ஹிந்தி) | கொத்த மல்லி |
| கம்மி (ஹிந்தி) | குறைவு |
| மஹஜர் (ஹிந்தி) | மனு |
| இதுக்கோசரம் (தெலுங்கு) | இதற்காக |
| அன்னியில் (தெலுங்கு) | பொருட்டு |
| சோப் (ஆங்கிலம்) | சவர்க்காரம் |
| கரக்டாக (ஆங்கிலம்) | சரியாக |
| Left/right (ஆங்கிலம்) | இடம்/வலம் |

ஈழத் தமிழரின் தமிழ், தமிழ்நாட்டுத் தமிழுடன் ஒப்பிடும்போது, அதன் தொன்மை இயல்புகள், தனித்தன்மை ஆகியவற்றைப் பேணுவதில் சிறந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகிறது. பல நூற்றாண்டுகள் தொன்மை வாய்ந்த பெருமளவு தமிழ்ச் சொற்கள் இன்றும் ஈழத் தமிழர்களது நாளாந்த பாவனையில் உள்ளன வேற்று மொழிகளின் தாக்கம் ஈழத் தமிழில் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

உதாரணங்கள் சில: எழுவான்கரை (கிழக்கு), படுவான்கரை (மேற்கு), கிறுகுதல் (திரும்புதல்), வெட்டை (வெளி), மறுகால் (திரும்பவும்).

மேலுள்ளவை இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் நாளாந்த பேச்சு வழக்கில் உள்ளன. வருக்கை (பலாக்காய்), சமைத்தல் (ஆக்குதல்) ஆகியவை இலங்கையின் கலகெதரை, அக்குரணை ஆகிய ஊர்களில் வாழும் முஸ்லிம் மக்களின் பேச்சு வழக்காகும்.

ஈழத் தமிழர் பற்றிய சரித்திரம் எதுவும் தெரியாமலோ அல்லது அது பற்றிய அக்கறை எதுவும் இல்லாமலோ கவர்ச்சிக்காக எழுச்சிமிக்க அடுக்கு வசனங்களை எழுதும் சினிமா வசனகர்த்தாக்களும், எதுகை மோனைகளுக்காக மட்டும் கவிதைகள் புனையும் கவிராயர்களும், வலிமை மிக்க சினிமா, புஸ்தகம், பத்திரிகைகள், இலத்திரனியல் ஊடகங்கள் (T.V, வானொலி) ஆகியவற்றின் ஊடாக இலங்கை ஒரு சிங்களத் தீவு எனக் கூறி, பாரிய துரோகத்தை, ஈழத் தமிழர்களுக்கு இழைக்கின்றனர். இவ்வாறான கேவலங்கள் உடனே நிறுத்தப்படல் வேண்டும் ஸ்ரீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லங்கா (இலங்கைத் தீவு) சிங்களமுமல்ல, சிங்களத் தீவுமல்ல.

இலங்கை அரசு சிங்கள இனவாதிகளின் புனையப்பட்ட சரித்திரத் தகவல்கள் மூலம் இலங்கைச் சரித்திரம் (சிங்கள) விஜயனில் இருந்தே ஆரம்பிப்பதாகவும் ஈழத் தமிழர்கள் பல்வேறு காலங்களில் இதன்பின் இலங்கையுட் புகுந்தவர்கள் எனவும் எல்லா இலங்கைச் சிறுவர்களுக்கும் சிறு வயதிலிருந்தே பாடப் புத்தகங்கள் மூலம் மூளைச்சலவை செய்கிறது. இதனால் இலங்கையிலுள்ள தமிழ்ச் சிறுவர்கள் யாவரும் உண்மையான ஈழத் தமிழர் சரித்திரப் பூர்வீகத்தை அறிய முடியாதவாறு மறைக்கப்படுகின்றனர்.

யுத்த முனையில் நேரடியாகக் கண்ட மனித அவலங்களையும் கேட்ட மரண ஓலங்களையும் தாங்கமுடியாமல் உலகப் புகழ்பெற்ற அசோகச் சக்கரவர்த்தி பௌத்த மதத்தைத் தழுவினார். அதே பௌத்த மதம் இலங்கையில் புத்த பிக்குகளாலும் (புத்த துறவிகள்) சிங்கள அரசியல்வாதிகளாலும் பௌத்த சிங்கள இனவெறியைத் தூண்டி வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் லக்ஷக்கணக்கான தமிழர்கள், பெண்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள், சிறுவர்கள், வயோதிபர்கள், நோயாளிகள், அப்பாவிகள் என்ற வேறுபாடின்றி, சிங்கள வெறியர்களால் கொல்லப்பட்டுள்ளனர். தமிழ்ப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

பெண்கள் வயது வேறுபாடின்றி ஆயிரக்கணக்கில், பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டனர். இப்போதும் உட்படுத்தப்படுகின்றனர். தமிழர்களுடைய சொத்துக்கள் யாவும் கொள்ளையடிக்கப்பட்டன. பெருந்தொகையான தமிழர் வீடுகள் அழிக்கப்பட்டன. இலங்கையில் புத்த தர்மம் கேவலப்படுத்தப்படுகிறது.

அனுராதபுரத்தில் உள்ள எல்லாள மன்னனின் சமாதியின் சமீபமாக எல்லாள மன்னன் அவரது படையணிகளுடன் யானை மேல் இருப்பது போன்ற சிலைகளும் துஷ்ட கைமுனு அவரது படையணிகளுடன் யானை மேல் இருப்பது போன்ற சிலைகளும் காணப்படுகின்றன. இனவாதத்தின் வெளிப்பாடாக எல்லாள மன்னரும் அவரது படையினரும் கரியநிறம் பூசப்பட்டுத் தோற்றமளிப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

ஈழத் தமிழர் வரலாறு இந்தியத் தமிழ் நாட்டிலுள்ளவர்களுக்குச் சரியான, தெளிவான முறையில் தெரியாதிருப்பதும் அதேபோல் உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களும் ஏனைய சமூகத்தினரும் ஈழத் தமிழர் சரித்திரத்தைத் தெரியாதிருப்பதும் ஈழத் தமிழர்களுக்குச் சாதகமான அரசியற் சூழ்நிலைகளை உலகளவில் ஏற்படுத்தாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத் தமிழரின் சாதனைகள் பலவுண்டு.

1. பரராசசேகரம் (வைத்திய நூல்) - யாழ்ப்பாண (நல்லூர்) அரசின் மன்னர் பரராசசேகரனால் ஆக்கப்பட்டது. செகராசசேகரம் - சோதிட நூல்
2. Bible இன் தமிழாக்கம் - ஆறுமுக நாவலர்
3. சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரான முதல் ஈழத்தவர் - விபுலானந்த அடிகள் (மயில்வாகனனார்), மட்டக்களப்பு.
4. உலகத் தமிழ் ஆராய்ச்சி மஹாநாட்டின் முன்னோடி - தவத்திரு F.X தனிநாயகம் அடிகள்
5. சி.வை. தாமோதரம்பிள்ளை - சென்னையில் நீதிபதியாக இருந்த இவர் உ.வே.சாமிநாதஐயருக்கு முன்னரே பல பழைய தமிழ் ஓலைச் சுவடிகளைத் தேடிக்கண்டுபிடித்து அச்சிற் பதிப்பித்வர்.
6. தமிழ் மூலம் உயர் கல்வி & தொழிற் கல்வி ஆகியவற்றின் முன்னோடிகள்
7. இலங்கையின் Cricket Captain சதாசிவம் (1948). இவர் சிங்கப்பூர், மலேசியா Teams-க்கும் Captain ஆக தற்போதை இருந்தார்.

இலங்கை சுதந்திரமடைந்த பின் உண்டான முதற் பாராளுமன்றத்தில் தமிழர் சிங்களவர் பிரதிநிதிகள் சம அளவிலேயே இருந்தனர். இலங்கையின் தமிழ் மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களைச் சிங்களமயமாக்கல் மூலமும் இலங்கையில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களை அழித்தல் அல்லது இலங்கையில் இருந்து முற்றாக விரட்டியடித்தல் மூலமும் இலங்கையை முழுமையான சிங்கள நாடாக்கும் முயற்சி இலங்கை சுதந்திரம் அடைந்த அன்றிலிருந்தே தொடங்கப்பட்டது. இதன் முதற்படியே ஒன்றுபட்டிருந்த தமிழர் சமூகம் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லிம்கள் எனப் பிரிக்கப்பட்டமை ஆகும். S.J.V. செல்வநாயகம் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட தமிழர்களும் சிங்களவர்களும் இணைந்து வாழக்கூடிய சமஷ்டி அமைப்பை சிங்கள இனவாதம் தோற்கடித்தது. தொடர்ந்து கொண்டிருந்த அநியாயங்களை எதிர்த்துத் தமிழர்களால் பல வருடங்கள் நடத்திய அஹிம்சை வழிப் போராட்டங்களும் பயனற்றவை ஆயின. இதன் காரணமாக தமிழீழம் அமைக்கப்படவேண்டும் என்ற தீர்மானம் வட்டுக்கோட்டையில் நிறைவேற்றப்பட்டது. தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி இலங்கை அரசுக்கு எதிராகப் பாரிய யுத்தத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை சுதந்திரமடைந்த நாளிலிருந்து இலங்கை அரசால் தமிழருக்கு பல அநீதிகளும் கொடுமைகளும் இழைக்கப்பட்டன.

பிரிஜாவுரிமைச் சட்டத்தால் பல லக்ஷம் இந்திய வம்சாவளித் தமிழ்த் தேயிலைத்தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டு நாடற்றவர்கள் ஆக்கப்பட்டனர். இதன் காரணமாகப் பாராளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதிகள் (Members of


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Parliament) எண்ணிக்கை மிகக் குறைந்தது. சிங்களவப் பிரதிநிதிகள் (M.Ps) மிக அதிகரித்தனர்.

அரசினால் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்களினால் தமிழர் பிரதேசங்கள் சிங்கள மயமாக்கல் தொடர்ந்தும் நடைபெறுகின்றது. இதனால் தமிழர் பிரதேசங்களும் பாராளுமன்றத்தில் தமிழர் பிரதிநித்துவமும் பறிக்கப்படுகின்றன.

இலங்கை சுதந்திரமடைந்தபோதும் அதன் பின்னரான சில பத்தாண்டுகள் காலத்திலும் இலங்கையின் தரைப்படை, வான்படை, கடற்படை ஆகிய முப்படைகளிலும் சிங்களவர்களும் தமிழர்களும் கலந்தே சேவையிலிருந்தனர். தரைப்படைத் தளபதியாக அன்ரன் முத்துக்குமாரு(தமிழர்), வான்படைத் தளபதியாக ராஜன் கதிர்காமர் (தமிழர்) ஆகியோரும் வேறு பல முக்கிய படைப் பதவிகளில் பல தமிழர்களும் இருந்தனர். சிங்கள, தமிழ் சமூகங்களை கௌரவிக்கு முகமாக Gemunu, Elara, காலாட்படைப் பிரிவுகளும், கடற்படையில் GEMUNU, ELARA, என்ற பெயருள்ள படைக் கப்பல்களும் இருந்தன. கடந்த 30 ஆண்டுகளில் நிலைமை மேல் இருந்து. கீழ்வரை எல்லாப் பதவிகளும் 100% சிங்களவர்களாலேயே நிரப்பப்பட்டுள்ளன. தமிழருக்கான அடையாளங்கள் யாவும் அழிக்கப்பட்டுள்ளன. தமிழருக்கெதிரான அரச


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JPL

படைகளின் வெறியாட்டங்களுக்கு இது ஒரு முக்கிய காரணம்.

இலங்கை அரசின் இலங்கைத் தமிழர்கள் மீதான கலாசான இனப் படுகொலைகள் (Cultural Genocide) எண்ணற்றவை:

ஆசியாவின் மிகப் பெரிய நூலகங்களுள் ஒன்றான யாழ்ப்பாண நூலகம் (Jaffna library) ஆயிரக் கணக்கான மிகத் தொன்மை வாய்ந்த ஓலைச் சுவடிகளையும் அரிய நூல்கள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டிருந்தது. இவையாவும் ஈழத் தமிழர்களது வரலாறு, கலாச்சாரம், வைத்தியம், தொழில் நுட்பம், இலக்கியம் போன்றவை சம்பந்தமாகவும், இவை சார்ந்துள்ள ஆய்வுகள் பற்றிய தாகவும் உள்ள மூல ஆவணங்கள் ஆகும். இலங்கை அரசினால் நன்கு திட்டமிட்டு அழிப்பு நோக்குடன் செயற்படுத்தப்பட்ட யாழ்ப்பாண நூலகத்தின் எரியூட்டல் ஈழத் தமிழ் மக்களின் சரித்திர கலாச்சாரப் பூர்வீகங்களை அழிக்க எடுத்த நடவடிக்கையாகும். 1981-இல் நடைபெற்ற மேற்படி எரியூட்டலில் பல ஏட்டுச்சுவடிகளும், புஸ்தகங்களும் சாம்பலாயின.

தமிழ் மக்களால் தமிழ்ச் சிறார்களின் கல்விக்கெனப் பல பாடசாலைகள் கட்டப்பட்டுச் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வந்தன. இவ்வாறான பாடசாலைகள் இலங்கையின் பல பகுதிகளிலும் இயங்கின. இலங்கை அரசின் திட்டமிடப்பட்ட சிங்களக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்றங்கள் காரணமாக மேற்படி பாடசாலைகளிற் சில அரசினாற் கையகப்படுத்தப்பட்டுச் சிங்களப் பாடசாலைகளாக மாற்றப்பட்டன. இதுவும் கலாசார இன அழிப்புக்கு மற்றொரு உதாரணம் ஆகும். (புத்தளம் St.Andrew's College இதற்கு உதாரணம்)

பாடப் புத்தகங்கள் மூலம் தமிழ்ச் சிறுவர்களுக்கு, ஈழத் தமிழர்களுக்குப் பாதகமான விதத்திலும் சிங்கள மக்களுக்கு மிகச் சாதகமான முறையிலும், ஈழத் தமிழர் வரலாறு திரித்துப் புகட்டப்படுவது நடைபெறுகிறது. இதனால் தமிழ்ச் சிறுவர்கள் சிறு வயதிலிருந்தே ஈழத் தமிழர் பற்றிய மிகத் தவறான வரலாற்றுத் தகவல்களால் மூளைச்சலவை செய்யப்படுகின்றனர். இதுவும் ஓர் வலுவான கலாசார இனப்படுகொலையாகும்.

தமிழ் மக்களை இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லிம்கள் மற்றும் பிரதேசவாரியாகப் பிரித்தல் போன்ற நடவடிக்கைகளால் தமிழினத்தை வலுவிழக்கச் செய்யப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பாரம்பரியத் தமிழ் ஊர்ப்பெயர்கள் அரச அனுசரணையுடன் சிங்களப் பெயர்களாக மாற்றப்படுகின்றன (உதாரணம்: மாதகல்- Jambukola Patuna).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரப்படுத்தல் எனப்படும் முறையால் சிங்கள மாணவர்களுக்கு மிகக் குறைந்த மதிப்பெண்களுடனும் தமிழ் மாணவர்களுக்கு உயிரந்த மதிப்பெண்களுடனும் உயர் கல்வியை அல்லது தொழிற் கல்வியை (சார்வகலாசாலை அல்லது தொழிற் பயிற்சிக் கலாசாலை மூலம்) பெற மேற்கொள்ளப்படும் அரசின் தேர்வுமுறை.

அரச வேலை வாய்ப்புகளில் தமிழர்கள் முற்றாகப் புறக்கணிக்கப்படுகின்றனர். தகுதிகளைப் பின்தள்ளி இனவாதத்துக்கே முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

பல்வேறு இலங்கை அரசுகளால் உண்டாக்கப்பட்ட தமிழ் மக்களுக்குப் பாதகமான அரசியற் சூழ்நிலைகளால், கடந்த சில ஆண்டுகளில், லக்ஷசக்கணக்கான தமிழர்கள் இலங்கையை விட்டு நீங்கி கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க், ஆஸ்திரேலியா, நியூசீலந்து ஆகிய நாடுகளில் நிரந்தரமாகக் குடியேறியுள்ளனர். இவர்களிற் பெரும்பான்மையோர் கல்விமான்களும் தொல் வல்லோருமாவர்.

இதேபோல இலங்கையில் பாதுகாப்பற்ற போர் அவலங்களால், பெருந்தொகையான தமிழ் மக்கள் இலங்கையிலிருந்து வெளியேறி வேறுநாடுகளில் அகதிகளாக வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலிருந்து இவ்வாறான பெருமளவு தமிழர்களின் வெளியேற்றங்களால் இலங்கையில் தமிழர் தொகை மிகக் குறைவதால் சிங்களவர் தமிழருக்கிடையிலான மக்கள் தொகை விகிதாசாரத்தில் சிங்களவரின் விகிதம் மிகக்கூடவும் தமிழர் விகிதம் மிகக்குறையவும் வழியமைத்துள்ளது.

கடந்த மே 2009-இல் முடிவுக்கு வந்த நீண்ட யுத்தத்தால் 150,000 தமிழ் மக்கள் கொல்லப்பட்டும் 20,000 வரை தமிழ் மக்கள் காணாமற் போயும் உள்ளனர். இதனால் மக்கள் தொகை விகிதாசாரத்தில் தமிழர் விகிதம் மேலும் மோசமடைந்து சிங்கள மக்களின் விகிதாசாரத்தை அதிகரிக்கச் செய்துள்ளது.

"சிங்களம் மட்டும்", "பௌத்த மதம் மட்டும்" போன்ற இனவாதச் சட்டங்கள், சிங்கள மஹாசபா, ஹெல உறுமய, ஜனதா விமுகதி பெரமுன, பௌத்த பிக்கு பெரமுன போன்ற இனவாத அமைப்புகள், சிங்கள இனவாதக் கட்சிகள் போன்றவை தமிழர்களின் தன்மானத்தை மிக மோசமாகப் பாதிப்பதுடன் அவர்களது எதிர்காலம், பிரதேசம் ஆகியவற்றையும் கேள்விக்குறியாக்கியுள்ளன.

தமிழர் ஒருவர் தனது வீட்டுக்கு வெளியே எங்கு சென்றாலும் எத்தனையோ கெடுபிடிகளையும் அவமதிப்புகளையும் சந்திக்க நேரிடும். எப்போதும் தனது அடையாள உறுதிப்படுத்தல் ஆதாரங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கு சென்றாலும் எடுத்துச் செல்வது அவசியம். வீட்டிலோ வெளியிலோ அவருக்கு எதுவிதமான பாதுகாப்பு உத்தரவாதமும் கிடையாது. வெளியிடங்களில் எங்கு தாங்குவதனாலும் பொலீசாரின் அல்லது படையினரின் அனுமதியைப் பெறுதல் வேண்டும். இதற்கான பணச் செலவுகளும் உண்டு. சிங்களவரெவருக்கும் மேற்படி கெடுபிடிகளோ பிரச்சினைகளோ இல்லை. அவர்கள் இலங்கையின் எப்பகுதிக்கும் செல்லவோ எங்கும் தாங்கவோ தடைகள் இல்லை. அவற்றுக்கான அனுமதியும் வேண்டியதில்லை.

தமிழாராய்ச்சி மஹாநாட்டுப் படுகொலைகள், யாழ்ப்பாண நூலக எரிப்பு, 1983 ஆடிக் கலவர இனப் படுகொலைகள், வெலிக்கடைச் சிறைக்கைதிகள் இனப்படுகொலை, செம்மணிப் படுகொலைகளும் பாடசாலை மாணவிகளின் கற்பழிப்பும் படுகொலையும், கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள், குமுதினிப்படகுப் படுகொலைகள், கிளாலிப் படுகொலைகள், நவாலி Church படுகொலைகள், வெள்ளை வான்(Van) மூலம் மாணவர்களும் மற்றையோரும் கடத்தப்பட்டுக் காணாமற் போதல், செஞ்சோலை இல்ல அனாதைக் குழந்தைகள் படுகொலை, பதுங்குகுழிகள் மற்றும் வைத்தியசாலைகளின் மேல் வானிலிருந்து குண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீச்சு எனத் தமிழருக்கெதிரான பல பயங்கரமான குற்றங்கள் கடந்த 60 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெறுகின்றன. இக்குற்றங்களைப் புரிந்தவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையையும் இலங்கை எடுக்கவில்லை. தமிழ்ப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் (M.Ps) பலர், பத்திரிகையாளர்கள் பலர் கொல்லப்பட்டபோதும் இலங்கை அரசின் நடவடிக்கைகள் ஏதுமில்லை.

பாடசாலைகள் யாவும் தேசிய மயமாக்கப்பட்டமை கிறீஸ்தவ மதத்தினருக்கெதிராக பௌத்த சிங்கள அரசாங்கம் மேற் கொண்ட பாரிய நடவடிக்கை என்பவற்றால் சிங்கள மாவட்டங்களில் சில தமிழ்ப் பாடசாலைகளும் சிங்களமயமாயின.

மே 2009-இல் முடிவுக்கு வந்த யுத்தத்தினால் இரண்டு லக்ஷத்துக்கு மேற்பட்ட தமிழர்களில் பெருந்தொகையினர் அங்கவீனர்களாகவும், காயமடைந்தவர்களாகவும், அனாதைக் குழந்தைகள் மற்றும் சிறுவர்களாகவும், குடும்ப அங்கத்தவர்களை இழந்தவர்களாகவும் உள்ளனர். முட்கம்பி வேலிகளுக்குள் வெளியே வரமுடியாதபடி அடைக்கப்பட்ட இவர்கள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி நரக வாழ்க்கை வாழ்கின்றனர். மருத்துவ வசதிகள், சத்துணவு, சுகாதாரமான துப்புரவுச் சூழல் ஆகிய எதுவும் அற்ற நிலைமை காரணமாக ஏற்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்களால் (போஷாக்கின்மை உட்பட) பெருந் தொகையானோர் நாளாந்தவும் இறக்கின்றனர். இளைஞர்களும் யுவதிகளும் கடத்தப்பட்டுக் கொல்லப்படுவதும் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்குட்படுத்தப்படுவதும் நாளாந்த நிகழ்வுகள். தொண்டர் நிறுவனங்களின் சேவையும் இவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு, உள்நாட்டுப் பத்திரிகை நிருபர்கள் இவர்களைப் பார்ப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால், வெளியுலகினருக்கு இம் முட்கம்பி வேலிகளுக்குள்ளே நடைபெற்ற மன்னிக்க முடியாத மனித உரிமை மீறல்கள் யாவும் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன.

கடந்த சில வருடங்களாக, சிங்கள மக்களின் வம்ச பூர்விக்கதை (இராமாயண) இராவணனின் சந்ததியினராகக் காட்டும் ஆதாரமற்ற உரிமை கோரல் முயற்சிகள் பல நடைபெறுகின்றன இவ்வுரிமை கோரல் முயற்சிகளின்படி இராவணனின் தம்பி விபீஷணன் சிங்கள மக்களுக்குத் துரோகமிழைத்தவனாகவும் இராமன் சிங்கள மக்களின் எதிரியாகவும் காணப்படுகின்றனர். (இவ்வாறான உரிமை கோரற் கட்டுரை ஒன்று ஹிந்துஸ்தான் ரைம்ஸ் (Hindustan Times) 04-11-2006 பத்திரிகையில் வெளியாயிற்று).

இராவணன் என்ற பெயர் சிங்கள மக்களிடையே என்றும் காணப்பட்டதில்லை. இந்துக்களிடையே கூட, அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த மொழியினராக இருந்தாலும், இராவணன் என்ற பெயரை அவர்கள் தங்கள் பெயராக ஏற்பதில்லை. ஆனால் இராமாயணத்தில் இராமன் பக்கம் சார்ந்தோர் பெயர்களைச் சிங்களவர்களும், எல்லாமொழி சார்ந்த இந்துக்களும். தங்களிடையே ஏற்றுக் கொள்கின்றனர். இராமயானம் சார்ந்த சிங்களப் பெயர்களின் சில உதாரணங்கள்: ராமாயணக்க, ராமச்சந்திர டி சில்வா, லக்ஷ்மன் பெரேரா, சீதா ரணவக்க.

இந்தியாவுக்கும் இந்துமதத்துக்கும் எதிரான வெறுப்பைத் தூண்டும் மேற்படி கட்டுரை கௌதமபுத்தரும், விஜயனும் இந்தியர்களே என்பதை மறந்துவிட்டது.

இவ்வளவு மன்னிக்கவே முடியாத அநியாயங்களும் தமிழின அழிப்புகளும் நடைபெற்ற பின்னும் சிங்கள இனவெறி இன்னும் ஓய்வதாக இல்லை. எனவே உலகத் தமிழர்களுக்கும் இலங்கையில் அரச பயங்கர்வாதத்துக்குப் பயந்து அங்கு வாழும் ஈழத் தமிழரும் சிங்களவருடன் சேர்ந்து வாழ்வதை விரும்பவே மாட்டார்கள். எஞ்சி உள்ள ஈழத் தமிழர்களை இன அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கும் ஈழத் தமிழகம் சிங்களமயமாகிப் பறிபோகாமால் இருக்கவும் தமிழ் ஈழம் அமைவதே சிறந்த தீர்வு ஆகும். இலங்கை பிளவுபடுவதை விரும்பாத நாடுகள், ஐ.நா.சபையினூடாக, கீழேயுள்ளவற்றையாவது ஓர் கால எல்லையுள் (அதிக பட்க்ஷம் 2 வருஷம்) நிறைவேற்றித் தரப் பொறுப்பேற்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 9

# ஈழத் தமிழரின் எதிர்காலம்

சிங்களவர்களின் வட இந்திய பூர்விகம் போலியானது என்ற பிரசாரம் வலிமையாக மேற்கொள்ளப்பட வேண்டும். ஈழத் தமிழர் சரித்திரம் தமிழ் நாட்டிலும், வட இந்தியாவிலும், உலகளாவிய ரீதியிலும் பிரசாரப்படுத்தல் மிக அவசியம்.

இலங்கை சுதந்திர்மத்தடைந்த நாளிலிருந்து (1948) இன்றுவரை வடக்கு, கிழக்கு, வடமேற்கு மாகாணங்களில் நடைபெற்ற சிங்களக் குடியேற்றங்களை முற்றாக அகற்றப்படல் வேண்டும்.

1948-இல் இருந்து இலங்கையில் இருந்து வெளியேறிய/வெளியேற்றப்பட்ட யாவரும் அவர்களது சந்ததியினரும் இலங்கையில் மீளக்குடியேற வகை செய்தல். இலங்கைக்கு வரமுடியாத இவ்வகையியனிருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

உயர்கல்விக்கு இனரீதியான தரப்படுதல் முறையை நீக்கி திறமைக்கே இடம் அளித்தல் வேண்டும்.

அரச சேவைகளுக்கான தெரிவுகள் தகுதி அடிப்படையில் மட்டுமே நடைபெறல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளுக்கும் சம அந்தஸ்து அளித்தல் வேண்டும்.

நேர்மையான சரித்திர ஆய்வுகள் நடத்துதல் வேண்டும்.

ஒன்றிணைந்த தமிழ் மாகாணங்கள், ஒன்றிணைந்த சிங்கள மாகாணங்கள் ஆகியவை மலையகத்தமிழ் மக்களின் நலன்களையும் உரிமைகளையும் விசேஷ கவனத்திற் கொண்டு சமஷ்டி முறையில் அரசாட்சி பெறல் வேண்டும்.

தமிழ் மாகாணங்களில் உள்ள காணி, பொலீஸ், ராணுவம் போன்றவற்றையும், தமிழ் மாகாணங்களை மீண்டும் கட்டியெழுப்ப வெளிநாடு உதவிகளைக் கோரும் உரிமையையும் தமிழ் மாகாண ஆட்சியின் பொறுப்பில் விடல் வேண்டும்.

யுத்தக் குற்றங்களை விசாரிக்க சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஐ.நா.சபையின் கணாகாணிப்புக் குழு ஒன்றை மேற்படி நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கென நிறுவுதல் வேண்டும்.

மேற்படி நியாயமான கோரிக்கைகள் இலங்கை அரசால் ஏற்றுக் கொள்ளப்படாத பக்ஷத்தில் அல்லது குறிப்பிட்ட கால எல்லையுள் நிறைவேற்றப்படாது வேண்டுமென்றே இழுதடிக்கப்படும் நிலையில் அல்லது தமிழ் மக்களுக்கெதிரான வன்கொடுமைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரும் நிலையில் எல்லா நாடுகளும் இணைந்து தமிழீழம் அமைய உதவ வேண்டும்.

இலங்கைப் பிரஜை எவரும் ஜனாதிபதியாகவோ பிரதமராகவோ ஆகும் உரிமையும், தமிழர் அல்லது சிங்களவரில் ஒரு இனத்தவர் ஜனாதிபதி அல்லது பிரதமர் ஆதல் வேண்டும் எனும் அரசியல் யாப்பும் அவசியம்.

இயற்கை வளமான நீர், நதிகளின் இணைப்பு மூலம், இலங்கையின் எல்லாப் பகுதிகளுக்கும் கிடைக்கப்பெறச் செய்தல் வேண்டும்.

மலைநாட்டுச் சிங்களவர்கள், கரைநாட்டுச் சிங்களவர்கள் என்ற வேறுபாடின்றி யாவரும் சிங்களவர்கள் என அழைக்கப்படுவது போல் ஈழத் தமிழர், மலையகத் தமிழர், இஸ்லாமியத் தமிழர் (முஸ்லிம்கள்) ஆகியோர் இலங்கைத் தமிழர் என்ற பொதுப்பெயரால் அழைக்கப்படல் வேண்டும்.

ஓர் சமஷ்டி அரசியல் அமைப்பின் கீழ் தமிழர்களும் சிங்களவர்களும் எல்லா வகையிலும் சம உரிமைகள் பெற்ற பின் இனவாதம், மதவாதம் ஆகியவை பேசும் அரசியற் கட்சிகள் முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும். இனவெறி, மதவெறி ஊட்டும் தனி நபர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் உள்ள எல்லா மதங்களும் மத்திய, மாநில அரசுகளால் சம அந்தஸ்துடன் பேணப்படல் வேண்டும். எந்தத் தனியொரு மதத்துக்கும் விசேஷ அந்தஸ்து, சலுகைகள் இருக்கக் கூடாது.

இலங்கையில் தமிழரின் எதிர்கால வாழ்வுக்கு இவை யாவும் இன்றியமையாதவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# References

1. Arumugam S.(1981), Some Ancient-Hindu Temples of Sri Lanka, 2nd Edition, Colombo, Sri Lanka, 86pp.
2. Arunachalam, P.(2004), Polennaruwa Bronzes and Siva Worship and Symbolism, Asian Educational Services, 34pp.
3. Arunthavarajah, K.(20141), The Views of Tamil Scholars Regarding the Origin of Jaffna Kingdom, Journal of Research on Humanities and Social Sciences, Vol.4, No.10, pp107 -111.
4. Pieris, P.E.(1917), Nagadhipa and Buddhist Remains in Jaffna, Journal of the Royal Asiatic Society, Ceylon Branch 70, Vol 26, pp11-44.
5. Pushparatnam, P.(1993), Punakary – An Archeological Survey, University of Jaffna, University.
6. Pushparatnam, P.(2000), Cultural Relationship between Northern Sri Lanka and Tamil Nadu up to the Fifth Century A.D. (Based on Archeological Survey) PhD Thesis, Tamil University, Thanjavur.
7. Ragupathy, P.(1987) Early Settlements in Jaffna – An Archeological Survey, Madras, Thillimalar Ragupathy.
8. Obeyasekara, M. and Srinivas, L. (2003), Article on SIGIRIYA in the CEYLON DAILY NEWS of 06-3-2003
9. Schalk, P. *et al* (2002) Buddhism Among Tamils in Pre- Colonial Tamilakam and Ilam, Part 1 (Prologue The Pre-Pallava and the Pallava Period), 504 pp.
10. Schalk, P. *et al* (2002) Buddhism Among Tamils in Tamilakam and Ilam, Part 2 (The period of the Imperial Color) Uppsala University, Seweden, 427pp.
11. Schalk, P. *et al* (2013) Buddhism Among Tamils in Tamilakam and Ilam, Part 3 (Extension and Conclusions) Uppsala University, Seweden.
12. Sithamparam, S.K.(2003) Debunking the Vijaya from Sri Lanka's early settlements, in Proto-historic Sri Lanka – A retrospect North Eastern Herald; 25-31 July 2003, Canada.
13. Siva Thiagarajah (2010), The People and Cultures of Pre-historic Sri Lanka – Part 4, Early Settlements around the Jaffna Lagoon, Published on 23 August 2010, The Guardian, Colombo.
14. Schalk, P. (2013), The Vallipuram Buddha Image Rediscovered, pp 295-312.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. Veluppillai, A.(1979-80) Tamil Influence in Ancient Sri Lanka with special Reference to Early Brahmi Inscriptions Journal of Tamil Studies, Vol.16-17, pp 6-19.
16. **திருக்கோணாசலபுராணம்**
17. **முன்னேஸ்வர ஸ்தலபுராணம்**
18. **திருஉத்தரகோச மங்கை ஸ்தலபுராணம்**
19. **சோம்நாத் சிவாலய ஸ்தலபுராணம்**
20. **மயில்வாகன புலவர்** (1736), **யாழ்ப்பாண வைபவமாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# APPENDIX A

a. முதலாம், இரண்டாம் தமிழ்ச் சங்கங்களின் பல்வேறு காலகட்டங்களில் மொத்தம் இரண்டு அல்லது மூன்று ஈழத்துப் புத்தந்தேவனார் என்ற பெயருள்ள ஈழத்துப் புலவர்கள் இருந்ததாகவும் அதே போல் மொத்தம் இரண்டு அல்லது மூன்று முரஞ்சியூர் முடி நாகராயர் என்ற பெயருடன் ஈழத்துப் புலவர்கள் அச்சங்க காலங்களில் இருந்ததாகவும் அபிப்பிராயங்கள் உண்டு.

b. ராஜ ராஜசோழன் இலங்கையை ஆட்சி செய்ததை உறுதி செய்யும் கல்வெட்டு (1012AD - 1044AD) திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயத்தின் உட்பிராகரத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. ராஜ ராஜசோழனின் மனைவி வானவன் மாதேவி ஆவார்.

c. சீகிரியாக் கோட்டை வாயில் சிங்கம் ஒன்றின் வாய் அதன் முன்னிரு கால்களுக்கு நடுவில் திறந்து இருப்பது போல் அமைந்துள்ளது. இதனால் இக்கோட்டை பிற்காலத்தில் சிங்ககிரி என அழைக்கப்பட்டது. இது காலப்போக்கில் மாறுதலடைந்து சீகிரி(ய) என ஆயிற்று.

d. கன்னியாவில் ஏழு கிணறுகள் வெவ்வேறு வெப்பநிலைகளில் உள்ளன. இன்றும் ஆடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமாவாசையில் கிழக்கு மாகாணத்தவர் பிதுர்கடன்களை இங்கு செய்கின்றனர். இராவணன் தனது தாயாரின் இறுதிக்கிரியைகளுக்காக இவ்வூற்றுகளை அமைத்ததாக திருக்கோணாசல புராணம் கூறுகிறது.

e. இராவணன் கோட்டை (Little Basses- Great Basses) கல்முனைக்குக் கிழக்கில் உள்ள மிகச் சிறிய தீவுகளின் கூட்டம். தமிழ் வரைப்படங்களில் இராவணன் கோட்டை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

f. Rodney Jonklass ஓர் ஆழ்கடல் ஆய்வாளருமாவர். 40 ஆண்டுகளுக்கு முன் இவர் திருகோணமலையில் கடலுக்கடியில் பாரிய கட்டிட இடிபாடுகளைக் கண்டார். இவை இராமாயணத்துடன் தொடர்புடையவை என இனம் கண்டு அவற்றின் படங்களை அக்காலத்துப் பத்திரிகைகளில் வெளியிட்டார்.

g. நாகதீபம் - தற்போதேய நயினாதீவு முரஞ்சியூர் முடி நாகராயர் போன்ற ஈழத்துச் சங்க காலப் புலவர்களது பெயர்கள் ஈழத் தமிழர்களான அவர்களது நாகவம்சத்தைக் குறிப்பதாக இருக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

h. சங்கிலியன் நல்லூர் (தமிழ் அரசு) அரசின் கடைசி மன்னன். இந்துத் தமிழ் அரசரான இவர் போர்த்துக்கேயர்களால் தூக்கில் இட்டுக் கொல்லப்பட்டார். இவருடன் வேறு பல இந்துக்களும் தூக்கில் இடப்பட்டனர். போர்த்துக்கேயரின் கத்தோலிக்க மத மாற்றத்துக்கு இவர் எதிராகத் தொழிற்பட்டதும் இதற்கு ஓர் காரணம். பண்டாரவன்னியன் - வன்னித் தமிழ் அரசின் கடைசி மன்னன். இந்துத் தமிழரான இவர் பிரித்தானியப் படையினரால் கொல்லப்பட்டார். ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன். சிறிது தமிழ்ப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய கண்டிய சிங்கள அரசின் கடைசி மன்னன். இவர் இந்துத் தமிழர். இவர் நாயக்கர் வம்ஸம். பிரித்தானியரால் தமிழ் நாட்டிலுள்ள வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டு அங்கு இறந்தார்.

i. தேசவழமை என்பது யாழ்ப்பாணத் தமிழரின் எழுதப்படாத புராதன நடை முறைச் சட்டங்கள் ஆகும்.

j. வடமோடி, தென்மோடி என்பன கிழக்கு இலங்கைத் தமிழரின் புராதன நாடக மரபாகும்.

k. SWRD பண்டாரநாயக்க: இவர் பல இனவாத, மதவாதச் சட்டங்கள் நிறைவேறக் காரணமானவர். (சில உதாரணங்கள் கீழுள்ளன)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சிங்களம் மட்டும் அரசகரும மொழிச்சட்டம். இதனால் சிங்களத்துடன் சம அந்தஸ்தில் இருந்த தமிழின் நிலை முற்றாக நீக்கப்பட்டது. S.J.V செல்வநாயகம், M.M. முஸ்தபா, Dr. E.M.V நாகநாதன் ஆகியோர் தலைமையில் இதற்கெதிராகப் பாராளுமன்றத்தின் முன் நடந்த சத்தியாக்கிரகப் போராட்டம் பண்டாரநாயக்காவின் குண்டர்களின் வன்முறையால் முறியடிக்கப்பட்டது. சத்தியாக்கிரகிகள் பலத்த காயங்களுக்குள்ளாயினர். சிறுநீர் புகட்டப்பட்டு இவர்கள் ஆற்றுள் வீசப்பட்டனர். பெருந்தொகையான் தமிழ் அரசாங்க ஊழியர்கள் இச்சட்டத்தால் வேலையிழந்தனர். 2. புத்தசாசனம், புத்தசமயம் ஆகியவற்றைக் காப்பதாகக் கூறும் மதவாதச் சட்டங்கள். 3. புனித புத்த பிரதேசத் திட்டம். 4. கிறீஸ்தவ பாடசாலைகள் அரசுடைமையாதல் 5. சிங்கள மாணவர்களின் மேற்படிப்புக்குச் சாதகமான தரப்படுத்தல் சட்டம் 6. வாகன இலக்கத் தகடுகளில் சிங்கள ஸ்ரீ சட்டம். இதனை எதிர்த்த தமிழர் பலர் கொதிக்கும் தாரில் வீசப்பட்டனர். பல தமிழர்கள் முதுகில் கொதிக்கும் தாரினால் சிங்கள ஸ்ரீ எழுதப்பட்டது. 7.தொடர் தமிழ் மாகாணங்களுக்கிடையில், அவற்றைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிப்பதற்காக, அவற்றிற்கிடையிலான, எல்லைகளில் ஊடுறுத்துச் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுதல்.

l. போர்த்துக்கேயர் ஆட்சியில் பெரும்தொகையான இந்துக் கோவில்கள் இடித்தழிக்கப்பட்டன. இந்து மதத்தைப் பின்பற்றியோருக்கு மிகுந்த வரிவிதிப்புகளும் தண்டனைகளும் வழங்கப்பட்டன.

m. இலங்கையின் சுதந்திரத்தைப் பிரித்தானியர்களிடமிருந்து பெற ஆரம்ப கர்த்தாக்களும் முன்னின்று உழைத்தவர்களும்
   a) Sir பொன்னம்பலம் ராமநாதன்
   b) Sir பொன்னம்பலம் அருணாசலம் ஆவர்.

   இதனைச் சிங்கள மக்கள் இன்றும் நன்றியுடன் நினைவு கூறுகின்றனர்.

n. இலங்கையின் மேற்குக் கரையோரம் முழுவதும் வாழ்ந்த தமிழ் மக்கள் போர்த்துக்கேயரது ஆட்சியின் போது கத்தோலிக்கர்கள் ஆயினர். அத்துடன் பெர்ணாண்டோ, பெரேரா. பிரீஸ், ஸில்வா, ஸோசொய்ஸா, சேரம், திஸேரா, கொஸ்தா, டிஸில்வா, டிஸொய்ஸா போன்ற போர்த்துக்கேயப் பெயர்களைத் தங்களது குடும்பப் பெயர்களாக (surnames) ஏற்றுக் கொண்டனர். பிற்காலத்தில் அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களவர்களாக மாறினார். அவர்களிற் பலர் பௌத்த மதத்தைத் தழுவினர். எனினும் அவர்களது போர்த்துக்கேயக் குடும்பப் பெயர்கள் இன்னும் அப்படியே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# APPENDIX B

இந்தியாவில் இன, மத, பிரதேச பேதம் இன்றி இந்தியர் எவரும் அந்நாட்டின் ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ, முப்படைத் தளபதியாகவோ வர முடியும்.

உதாரணங்கள்:

## ஜனாதிபதிகள்

1. R. வெங்கட் ராமன் (தமிழர் - இந்து)
2. அப்துல் கலாம் (தமிழர் - முஸ்லிம்)
3. ஸாக்கிர் ஹூசேன் (ஹிந்தி - முஸ்லிம்)
4. ராதா கிருஷ்ணன் (தெலுங்கர் - இந்து)
5. V.V. கி.ரி (தெலுங்கர் - இந்து)
6. பிரதீபா (மராட்டியர் - இந்து)
7. பிரணாப் முகர்ஜி (வங்காளி - இந்து)

## பிரதமர்கள்

1. நேரு (ஹிந்தி - இந்து)
2. இந்திரா காந்தி (ஹிந்தி - இந்து)
3. வாஜ்பாய் (ஹிந்தி - இந்து)
4. மன்மோஹன் சிங் (பஞ்சாபி - சீக்கியர்)

## முப்படைத் தளபதிகள்

1. ஜெனரல் கரியப்பா (கூர்க்கர்)
2. ஜெனரல் ஸாம் மானெக்ஷா (பார்சி)
3. ஜெனரல் சுந்தர்ஜி (தமிழர்)

இலங்கையில் பிரதமராகவோ, ஜனாதிபதியாகவோ, முப்படைத் தளபதியாகவோ வருவதற்கு ஒரு பௌத்த சிங்களவருக்கு மட்டுமே முடியும். வேறு எந்த இலங்கைப் பிரஜைக்கும் இந்த வாய்ப்பு இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# APPENDIX C

## இலங்கையின் பிரபலமான சமீபகால தமிழ்க்கல்விமான்கள், கவிஞர்கள், கலைஞர்கள்

## கல்விமான்கள் + கவிஞர்கள்

1. ஆறுமுக நாவலர்
2. விபுலானந்த அடிகள்
3. வித்துவான் கணேஷஜயர்
4. காசிவாசி செந்திநாதஜயர்
5. நவாலியூர் சோமசுந்தரப்புலவர்
6. ஆசனா லெப்பைப்புலவர்
7. F.X. தனிநாயகம் அடிகள்
8. சைமன் காசிச்செட்டி
9. பண்டிதமணி கணபதிப்பிள்ளை
10. கொக்குவில் குமாரசாமிப்புலவர்
11. தாவீது அடிகள் (Ref Fr. David)
12. வித்துவான் வேந்தனார்
13. செகுத்தம்பிப்பாவலர்
14. நவநீத கிருஷ்ண பாரதியார்
15. பண்டிதர் வேற்பிள்ளை
16. புலவர் சிவபாத சுந்தரனார்
17. வித்துவான் சுப்பையாபிள்ளை
18. வித்துவான் அப்துல்ரகுமான்
19. Dr. கைலாசபதி
20. Dr. சு வித்தியானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JPL

21. Dr. கமாலுத்தீன்
22. Dr. கா சிவத்தம்பி
23. A.M.A அஸீஸ்
24. கவிஞர் முருகையன்
25. Dr. கைலாஸநாதக் குருக்கள் (சமஸ்கிருதம்)
26. ஸீதாராம ஸாஸ்திரிகள் (சமஸ்கிருதம்)
27. சி. வை. தாமோதரம்பிள்ளை
28. அச்சுவேலி குமாரசாமிக்குருக்கள்
29. கலைஞானி

## சமயம், தத்துவம்

1. யோகர் சுவாமிகள்
2. கடையிற் சுவாமிகள்
3. Dr. ஆனந்தகுமாரசாமி
4. சுவாமி நாதத் தம்பிரான் (மணி ஐயர்)
5. விபுலானந்த அடிகள்

## விஞ்ஞானிகள்

1. பேராசிரியர் C.J. எலியேசர்
2. பேராசிரியர் A.W. மயில்வாகனம்
3. பேராசிரியர் கந்தையா

## சங்கீதம் மற்றும் கலைகள்

1. பரம் தில்லைராசா (வாய்ப் பாட்டு)
2. கருணாகரன் (வாய்ப் பாட்டு)
3. ஷண்முகரத்தினம் (வாய்ப் பாட்டு)
4. சரஸ்வதி பாக்கியராசா (வாய்ப் பாட்டு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

5. பூமணி ராஜரத்தினம் (வாய்ப் பாட்டு)
6. மோஹனாம்பிகை கணேஷன் (வாய்ப் பாட்டு)
7. வைத்தீஸ்வர ஐயர் (வயலின்)
8. ராமநாதன் (மிருதங்கம்)
9. ஸர்வேஸ்வர ஸர்மா (வயலின்)
10. அளவெட்டி பத்மநாதன் (நாதஸ்வரம்)
11. சாவகச்சேரி Dr. பஞ்சாபகேசன் (நாதஸ்வரம்)
12. சாவகச்சேரி நாகேந்திரன் (நாதஸ்வரம்)
13. மாவிட்டபுரம் உருத்திராபதி (நாதஸ்வரம்)
14. காணமூர்த்தி & பஞ்சமூர்த்தி (நாதஸ்வரம்)
15. சாவகச்சேரி அப்புலிங்கம் (நாதஸ்வரம்)
16. சாவகச்சேரி ஷண்முக சுந்தரம் (நாதஸ்வரம்)
17. சாவகச்சேரி நடராஜ சுந்தரம் (தவில்)
18. சாவகச்சேரி முருகப்பா (தவில்)
19. கைதடி பழனி (தவில்)
20. சின்னராசா (தவில்)

245673

## *இலங்கை வானொலி*

இலங்கை வானொலியின் தமிழ்த்தேசிய சேவையும் தமிழ் வர்த்தக ஒளிபரப்பும் சென்ற நூற்றாண்டில் மிகுந்த வலிமையுள்ள தமிழ் ஊடகங்களாக உலகப் புகழ் பெற்று விளங்கின. பல தென்னிந்திய, இலங்கை அறிஞர்கள், கலைஞர்கள் ஆகியோரை ஊக்குவித்துப் புகழடையச் செய்வதில் இலங்கை வானொலியின் பங்களிப்பு மகத்தானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org